ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி சமய - சமூக - இலக்கிய வெளியீடு ஆகஸ்ட் - 2011 25/=



# தொண்டன்


ஆகஸ்ட் 2011

மலர்- 43 இதழ்- 06


**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
சந்திரசேகரன் சசீதரன்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
S. சுபாஜெனி

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.

# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 01 |
| 11வது அனைத்துலக ..... | - | 02 |
| ஈழத்தை அளந்த புனிதன் | - | 03 |
| தந்தை உள்ளம் ...... | - | 04 |
| காருண்ய ரஷ்ய எழுத்தாளர் .... | - | 06 |
| மாணவர் பக்கம் | - | 07 |
| மட்டக்களப்பு கிறிஸ்தவ கலை .. | - | 08 |
| இறப்பினும் வாழ்வாள் | - | 10 |
| இன்றைய உலகில் திருச்சபை | - | 13 |
| இலக்கிய மஞ்சரி | - | 15 |
| புழுக்களாய் பூச்சிகளாய் | - | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | - | 17 |
| ஐ. நா. போர்க்குற்ற அறிக்கை... | - | 19 |
| கடுகுக் கதை | - | 22 |
| ஆளுமையின் அவசியம் | - | 23 |
| அமைதிப் பயணம் | - | 26 |
| விவிலியம் கற்போம் | - | 27 |
| அறிவை வளர்ப்போம் | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

"சூரியன் அஸ்தமிக்காத நாடு இங்கிலாந்து" என்று புகழ் பெற்ற நாட்டில் ஏற்பட்ட கலவரங்களை ஆராயும்போது மக்களின் மனநிலை உலகின் எல்லாத் திசைகளிலும் ஒன்றாகத்தான் உள்ளது என மதிப்பிட முடிகிறது. அதாவது சாதகமான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டால் அதனைப் பயன்படுத்திக்கொள்வதுதான் மனித உணர்வுகள். அதாவது அடக்கி, அடக்கி வைத்திருக்கும் வக்கிர உணர்வுகளும் காழ்ப்புணர்ச்சிகளும் வஞ்சமும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் வெளிவந்து விடுகின்றன என்பதை நிரூபிக்கின்றன லண்டன் நாட்டுக் கலவரங்கள்.

இலங்கைத் திருநாட்டின் தென்பகுதியிலும் தற்போது இவ்வாறான உணர்வுகள் வெளிக் கொணரப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அனைத்து அசம்பாவிதங்களுக்கும் காரணம் தமிழ்ப் பயங்கரவாதிகளெனச் சுட்டிக்காட்டி மூடிமறைத்த வையெல்லாம் மெல்ல மெல்ல விஷ்வரூபம் எடுக்கின்றன.

அன்று தொட்டு இன்று வரை தங்கள் கைங்கரியங்களை மூடி மறைக்கவும், தந்திர உபாயங்களை அமுலாக்கவும், பல்வேறு விதமான வேடிக்கை வினோத விளையாட்டுகளையும், கிரிக்கட் காய்ச்சல்களையும், கம்முதாவ திட்டங்களையும் அவ்வப்போது நடாத்தி மக்களின் மனங்களை திசை திருப்பி வந்தவர்கள், தற்போது மர்ம மனிதர்களை உலாவவிட்டு, பெண்களை வேட்டையாடி, இரத்தம் உறிஞ்சி, நாட்டை, நாட்டுமக்களின் மனநிலைகளைத் திசைதிருப்பி, நித்திரை செய்யவிடாது கதிகலங்க வைக்கிறார்கள். யாரைக் கண்டாலும் மர்ம மனிதர்களோ எனச் சந்தேகம் கொள்ள வைத்திருப்பதும், ஏதோவொரு பயங்கரமான செயலைச் செய்து கொண்டிருப்பதற்கான காய் நகர்த்தலாகவே இருக்கும். அது ஆயுளை நீடிக்க, ஆட்சியைத் தக்கவைக்க, புதையலை அகழ, துட்டகைமுனுவின் வீரத்தைப்பெற யாகங்கள் செய்யவென பல காரணங்களாகக் கூட இருக்கலாம் என சாமானிய மக்கள் பேசிக்கொள்வதையும் அறியக்கூடியதாக இருக்கிறது.

வடகிழக்கில் நடைபெற்று முடிந்துள்ள சில உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வெல்லும் முகமாக தகப்பனும் மகனும் சேர்ந்து வேட்டி சட்டை, சாறி சரம் எனக் கொடுத்தும் வெல்ல முடியாத விரக்தியின் இன்னொரு பக்கமாவும் இது அமையலாம்.

சனல் 4ல் ஒளிபரப்பப்பட்ட காணொளிக்காட்சியைப் பார்த்துவிட்டு "நாங்கள் இலங்கையில் பிறந்தோம் எனச் சொல்ல வெட்கப்படுகிறோம்" என வெளிநாட்டில் வசிக்கும் தன் மகனும் மகளும் தொலைபேசியில் தெரிவித்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தொலைக்காட்சியில் தெரிவித்ததையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

"தன்னையும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றான் தொண்டன்"
"அட்டைப் படங்களால் கவர்ந்திழுக்கின்றான் தொண்டன்"
"கிறிஸ்தவ இதழ்களில் ஒரு தனி ரகமாக ஜொலிக்கின்றான் தொண்டன்"
"காத்திரமான பக்கங்களால் படிக்கவைக்கின்றான் தொண்டன்"

என தொண்டன் இதழைப் பற்றி தொண்டன் அபிமானிகள் பேசும்போது மனம் குளிர்கின்றது. நீண்டகாலமாக இணைஆசிரியராக தன் பணியைக் கச்சிதமாக ஆற்றுபவருக்கும் பக்கபலமாகப் பணியாற்றும் துணை ஆசிரியர்களுக்கும், ஆலோசகர்களுக்கும், கணினி வடிவமைப்பாளர்களுக்கும், வணசிங்கா அச்சகத்துக்கும், எழுத்தாளர்களுக்குமே இப் பெருமை சேரும். எனவே ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டு என்று சொல்வதைப்போல் இது விடைபெறும் நேரம். உடன் உழைப்பாளிகள், வாசகப்பெருமக்கள், விமர்சகர்கள் அனைவருக்கும் உளங் கனிந்த நன்றிகள்.

தொண்டனின் தோழர்களாகிய நீங்களும் நீடூழி வாழ்ந்து ஜொலித்து மணம் வீச ஆசிகளும், வாழ்த்துகளும்.

*என்றென்றும் நன்றியுடன்* - **ஆசிரியர்** -



## இறைவாக்கு

"எந்நிலையிலும் நம்பிக்கை எனும் கேடயத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். அதைக்கொண்டு தீயோனின் தீக் கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்"

• (எபே.6:16)

# 11 வது அனைத்துலக இளையோர் தினம் 2011



இவ்வாண்டு உலக இளையோர் தினம் ஸ்பெயின் நாட்டில் மெற்றித் நகரில் நடைபெறுவது அனைவரும் அறிந்த செய்தி.

1987ம் ஆண்டு ஆன்ஜென்ரீனாவில் திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்களால் முதன் முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்ட உலக இளையோர் தினம் பதினொராவது முறையாக இவ்வாண்டு ஆகஸ்ட் 11 முதல் 21ம் திகதி வரை ஸ்பெயின் நாட்டில் நடைபெற்றது.

பல்வேறு நாடுகளிலிருந்து வரும் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் ஒன்றாகக் கூடிப் பழகி தமது பாரம்பரிய கலாசாரங்களைப் பகிர்ந்துகொள்ள வும், கிறிஸ்துவின் நற்செய்தியை அறியவும், வாழ்க்கை பற்றிய உயர்ந்த மதிப்பீடுகளைக் கற்றுக் கொள்ளவும் திருத்தந்தையால் ஏற்பாடு செய்யப்படும் மிகப்பெரிய நிகழ்வு இதுவாகும்.

இவ்வாண்டு உலக இளையோர் தினத்தின் கருப்பொருளாக 'கிறிஸ்துவில் வேரூன்றியவர்க ளாகவும் நம்பிக்கையில் உறுதியோடும்' என்ற திருநூல் வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாண்டு ஆகஸ்ட் 11ம் திகதி ஆரம்பித்த உலக இளைஞர் தின நிகழ்வுகளில் 18ம் திகதி முதல் 21ம் திகதி வரை திருத்தந்தை உலக இளைஞர்க ளுடன் கலந்து கொண்டார்.

நாளைய உலகின் தலைவர்கள், நாளைய திருச்சபைத் தூண்கள் என்றெல்லாம் இளையவர்களின் முக்கியத்துவம் பேசப்பட்டாலும் இன்றைய பொழுதில் அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள், சவால்கள், நோவுகள், சீரழிவுகள் தான் அதிகம். அரசியல் வாதிகள், கட்சி அமைப்புகள் எல்லாம் இளைஞர்களின் ஆற்றல் களையும், சக்திகளையும் தமது வளர்ச்சிக்கும், நலத்துக்கும் பயன்படுத்த முனைகின்றனவே தவிர அவர்களது எதிர்கால வாழ்வை, எதிர்கால உலகின் மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு செயற்படுவதில்லை.

இன்றைய உலகில் நடைபெறும் போராட்டங்கள், புரட்சிகள், மலர்ச்சிகள், மீட்சிகள் அனைத்துக்கும் தம்மை அர்ப்பணித்து நிற்பவர்கள் இளைஞர்கள். ஆனால் அவர்களது உணர்ச்சி நிறைந்த வேகமும் சக்தியும் சுயநலவாதிகளால் சுரண்டப் பட்டும் தவறாக வழிநடத்தப்பட்டுமே வருகின்றது. அதனால்தான் நவீன உலகின் சீரழிவுகளுக்குப் பின்னாலும் இளைஞர்களே திரள்வதை நாம் பார்க்க முடிகிறது.

இப் பாரதூரமான நிகழ்வுகளை அவதானித்த திருச்சபை உலக அளவில் இளைஞர்களை ஒன்று திரட்டி, அவர்களது இயல்புகளைப் புரிந்து ஆற்றுப்படுத்தி நாளைய உலக மேம்பாட்டின் காவலர்களாக வழிநடத்த முயல்கிறது. உள்ளூர் அளவிலும் உலக அளவிலும் இளைஞர்களை அணிதிரட்டி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைத் திருச் சபை செயற்படுத்தி வருகின்றது. அவைகளின் ஓர் உச்சக்கட்ட நிகழ்வே ஸ்பெயினில் நடைபெறும் உலக இளையோர் தினமாகும்.

இந்நிகழ்வுக்கு நமது மறைமாவட்டங்களிலிருந்தும் இலங்கையின் ஏனைய மறைமாவட்டங் களிலிருந்தும் இளைஞர்கள் பங்கு கொண்டுள்ளனர் என்பது குறிப்பிதக்க விடயமாகும்.



# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



## 21 இறுதி நோய்

செண்பகக்குழல்வாய்மொழி

ஈழத்தை யளந்தவர்
இணையிலா தோடினார்
ஞாலத்தின் விடுதலை
அதற்கொரு விலைதர
ஆழத்தில் இறங்கிமெய்
அறிவினுக் கெட்டிய
ஞானத்தின் விழுதினைக்
கண்டுதி ளைத்தனர்

இருநிதி மடியினில்
சுமந்தவர் மனநிலை
ஒருநதி நடந்தகால்
இளைக்குமா புவியினில்?
பொருதியே உலகுடன்
புனிதனும் ஆகினார்
உருவிலே நடந்தகால்
நசிவுற லாகினார்.

மனதெலாம் விரும்பினும்
மறுத்திடும் கால்களோ
வினவினால் 'தனக்குமொன்
றில்லையே' என்குவார்
நாடெலாம் நடந்ததால்
நலமிலா தேகமாய்
வாடியே சோர்ந்தனர்
வளமிலாப் பயிரென

தனக்கினிப் பணியது
கனவுதா னென்றவர்
தனக்குளே குமுறுவார்
தவிரவும் எழுகுவார்
அனலினில் புரண்டிடும்
புழுவினைப் போலவர்
நிலையினைக் கடிதினில்
அறிந்தவ ரோசிலர்

இருந்துமோர் காலையில்
எழுந்தவர் ரிறுதியாய்
கிழக்கினை யொருதரம்
வலம் வருந் துணிவுடன்
விருப்பொடு கொட்டியா
புரமதை அண்டினார்
உறுதியில் விழுந்ததோ
முதலடி வீழ்ந்தனர்.

அத்துடன் முடிந்தது
அவரது பயணங்கள்,
அயர்ந்தவர் உடலதோ
அறுதியில் வீழ்ந்தது
நித்திய மறையினை
நிலமதில் விதைத்த வாய்
முத்திரை இட்டதாய்
மூடியே கொண்டது.

நோக்கிடுஞ் சாவினை
நோவிலா தேற்கவே
தூக்கமில் லாதவர்
தூயனைப் போற்றுவார்
போர்க்களம் போலவர்
நெஞ்சமும் ஆனது
பார்த்தவர் கண்களோ
பனித்திரை யானது.

மரணத்தை நெருங்குமுன்
மனிதமெய் ஞானத்தை
ஒடுக்கிட ஒன்பது
நாளதை ஆக்கினார்
இருந்துமோ ராறுநாள்
ஒடுக்கமும் கழியுமுன்
முடித்தனர் ஒடுக்கினை
பருந்துமேல் பறந்தது.

இவ்விதம் மாசிகை
நான்கெனக் கழிந்தது
இருப்பினும் அவருடல்
இயங்கவே மறுத்தது
துரும்பினைப் போலவர்
தூங்குவார் பாயினில்
அரும்பிடும் அழுகையில்
அவரது சீட்டும்.

– வளரும் –




அன்பு எங்கு பிறக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. அது ஓர் உன்னதமான உணர்வு என்பது மட்டுமே உண்மை. அது தெய்வீக மானது, புனிதமானது, அதன் பண்புகள் எத் துணை உயர்வானது என்பதை எல்லாம் தூய பவுல் எமக்குத் தெளிவாக எழுதி வைத்திருக்கின்றார். இத்தகைய மேன்மையான உணர்வு மனிதனிடம் உண்டாகியிருக்க முடியாது.

அன்பானது நிச்சயமாக இறைதன்மை யைக் கொண்டிருப்பதால் அது இறைவனைத் தவிர வேறு எவரிடமிருந்தும் உருவாயிருக்கவே முடியாது. அந்த ஆதி மூலன் தெய்வீகமான தன் அன்பைத் தனக்கென மட்டும் வைத்துக்கொள்ளாமல் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவல் கொண்ட தன் காரணமாகவே மனிதனைப் படைத்தார் என்பதையும் நம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

இப்படி விளங்கிக்கொள்ள முடியுமாக இருந்தும், அந்தத் தந்தையுள்ளம் மனிதன் மீது காட்டும் அன்பினைப் புரிந்துகொள்ளாதவராய் நாம் அலகையின் கரங்களுக்குள் சிக்குப்பட்டு இறைவனையே புறக்கணித்து பாவத்தின் மக்களாய் வாழ்ந்து நிற்பதுதான் மிகவும் கொடுமை.

தன் அன்பைத் திரும்பத் திரும்பப் புறக் கணிக்கும் மனிதன், தன்னை விட்டுத் தொலையட் டும் என்று ஒதுக்கிவிட முடியாத அந்த அன்பின் ஊற்று நம்மை மீண்டும் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்ளத்துடிப்பதன் வெளிப்பாடே ஊதாரிப் பிள்ளையின் உவமையாக இயேசுவிடமிருந்து வெளிப்படுகின்றது.

ஊதாரிப் பிள்ளை உவமையில் வெறுமனே செல்வத்தையெல்லாம் ஒழித்து தறுதலையாய் வாழ்ந்து, எல்லாம் போனபின் ஞானம் பெற்று ஓடோடி வந்து தந்தையின் மன்னிப்பைப் பெற்ற மகன் என்ற வகையிலோ, அல்லது தகப்பனோடு கூட இருந்து அவரை மனம் நோகப் பண்ணாமல் வாழ்ந்ததினால் சீரழிந்தவனை மறுபடியும் சீராட்டும் தந்தையிடம் மனம் வெதும்பும் மூத்த மகன் என்ற வகையிலோ அலசிப் பார்ப்பதுடன் நின்றுவிட முடியாது. அந்தத் தந்தை யுள்ளத்தின் தாக்கத்தையும் சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலந்தான் இயேசு இந்த உவமையை எடுத்து கொண்டதின் உண்மை அர்த்தத்தையும் எம்மால் கண்டுகொள்ள முடியும்.

தன் இரு பிள்ளைகளின் ஆதரவுடன், அன்பின் உறவில் நெஞ்சார்ந்த கனவுகளுடன் உழைத்து நின்ற தந்தை, நிச்சயமாகத் தன் சுக போகத்துக்காகவா அத்தனையையும் சேர்த்து வைத்து ஆடம்பரமாக வாழ்ந்திருப்பான்? தன்னுடன் தோள் நிற்கும் மக்கள் சிறப்புற வாழ வேண்டும்; உயர்வாக இருக்கவேண்டும் என்றல்லவா கனவுல கில் அவன் மிதந்திருப்பான்? அப்படிப்பட்ட தந்தையி டம் போய் என் பங்கைப் பிரித்துக் கொடு என்று ஒருவன் தலை கீழாய் நின்றபோது அந்தத் தந்தை யுள்ளம் எவ்வளவு தூரம் நொருங்கியிருக்கும் என்று கற்பனை பண்ண முடிகிறதா நம்மால்? போனவன் வருவானா மாட்டானா என்று நாளும் பொழுதும் வழி மேல் விழி வைத்துத் தவிப்புடன் காலம் போக்கிய தந்தைக்குத் தன் மகன் மீண்டும் வந்தபோது மகிழ்ச்சி உச்சந்தலைவரை தட்டியி ருக்காதா? தலைகால் புரியாத மகிழ்ச்சியில் அவன் விழாவெடுத்து எவ்வளவு தூரம் தன் பிள்ளைகளைப் பாரபட்சமில்லாமல் நேசித்தான் என்பதற்கு இது எடுத்துக்காட்டு! ஏற்கனவே பட்டிருந்த வேதனை மறைந்ததே என்று அந்தத் தந்தையுள்ளம் மகிழும்

போது, மூத்தவன் தன் பங்குக்கு ஓர் அம்பை நெஞ்சிலே வீசுகின்றான்.

'இத்தனை காலமும் உன்னை வேதனைப் படுத்தக்கூடாதேயென்று வாழ்ந்த எனக்கு நீ என்ன செய்தாய்?' என்று சுடு மொழியாக அம்பு வீசுகின்றான். தகப்பன் பதறிப்போய் சொல்லும் ஆறுதல் வார்த்தை யைக்கூட அவன் கேட்க மறுக்கின்றான். இரண்டு மக்களும் தந்தையிடம் காட்டிய பரிவு, பாசம், மரியாதை, அன்பு, எல்லாம் எதிர்பார்ப்புகளோடு கூடியது. இதனால் அவர்கள் சொந்தத் தந்தை யென்றும் பாராமல் தங்கள் அன்புக்கு விலை வைத்தார்கள். எந்த எதிர்பார்ப்புகளுமின்றி எல்லோரும் நலம் வாழ விரும்பிய தந்தையோ, சுக்கு நூறாகி உடைபட்டு தன் பிள்ளைகளிடம் கெஞ்சு கிறான் கொஞ்சுகிறான். நாம் எல்லோரும் ஒன்றாக வாழ்வோம் என மன்றாடுகின்றான். இதுதான் இறைவன் காட்டும் தந்தைக்குரிய அன்பு என கிறிஸ்து எமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

இப்படிப்பட்ட தந்தையுள்ளத்தால்தான் கெட்டழிந்த தன் மக்களை மீண்டும் தன்னோடு சேர்த்தெடுத்து நாம் ஒன்றாக வாழ்வோம் என்று கூறமுடியும். அதற்காகத்தான் அந்தத்தந்தை எந்த விலையையும் கொடுக்கத் தயாராகவிருந்தார் என்பது கிறிஸ்துவால் - இறைவனின் ஒரே மகனின் மானிட வருகையால்-பாடுகளால்-சிலுவை மரணத்தால்-நிரூபணமாகின்றது. ஆனால் நாம் அந்தத் தந்தையின் உள்ளத்தைப் புரிந்துகொள்கின்றோமா? அவரின் ஆசைகளை விளங்கிக் கொள்கின்றோமா? தன் மக்களுக்காக அவர் செய்த தியாகத்தை-அவர் தம் மகனின் மரணம் நமக்காக என்பதை ஏற்றுக் கொள்கிறோமா? அப்படி ஏற்றுக்கொண்டால் உன்னில் ஏற்படும் மாற்றம் என்ன?

**ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம்**

## பாசம் மிக்க அன்னைக்குப் பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**ஜெயராணி மாணிக்கராஜா**

தோற்றம் : 1944.08.31
மறைவு : 2001.08.11

அன்புக்கு இலக்கணமாய்
பண்புக்குப் புகலிடமாய் - எம்
எண்ணங்களில் நிறைந்து வாழும் இனியதாயே - நீ
விண் புகுந்து விட்டாலும்
வினயமான உன் நினைவால் வேதனை பெருகுதம்மா

பத்து ஆண்டுகள் பறந்தோடி விட்டதம்மா - நீ
பயணித்த நாளெமக்கு இன்று போல் இருக்குதம்மா
பாசம் நிறைந்த பண்பான அன்னையே - நீ
பரலோகம் சென்று இறை பணிவிடைகள் செய்கிறாயோ?

வரம் பெற்றோம் உன் வம்சத்தில் வாழ்வதற்கு
உரம் பெற்றோம் நீ ஊட்டி வளர்த்ததனால்
சரம் தொடுத்து உன்னுருவப் படமதற்குச் சாற்றி
சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்தி வரம் வேண்டுகிறோம்.
சீர்பெற்று வாழ்கவென்று வாழ்ந்திடம்மா அங்கிருந்து.

என்றும் உங்களது நினைவுடன் வாழும் உங்களது அன்பு நெஞ்சங்கள்
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இல.02, ஞானசூரிய சதுக்கம்,
திருமலைவீதி, மட்டக்களப்பு.

# காருண்ய ரஷ்ய எழுத்தாளர் மெக்சிம் கொர்க்கி



ரஷ்யாவில் மெக்சிம் கொர்க்கியுடைய பிறப்பிலிருந்து இறப்புவரையான அவருடைய வரலாற்றை மையமாகக் கொண்ட விடயங்கள் அடங்கிய காட்சி சாலையொன்றுண்டு. இக் காட்சி சாலை ஏனைய எழுத்தாளர்களுடையதை விட அளவில் பெரிதானது. ஓவியங்கள், கடிதங்கள், கூற்றுகள், கதிரைகள், மேசைகள், கட்டில், ஆடைகள் என இங்கே ஒழுங்குபடுத்தி வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் ஒழுங்கு படுத்தினவர்களுடைய அன்பும் பாசமும் வெளிப்படுகின்றது. அங்கு ஆயுதத்தினால் உருவான சிதைவு ஒன்று கொண்ட சட்டை ஒரு கண்ணாடி அலுமாரியில் உள்ளது. கொர்க்கி தாம் எழுதிய புத்தகங்களால் பெருமளவிலான வருமானத்தைப் பெற்றவர். ஆனால் அவர் தனக்கென்று பணம் சேர்க்கவில்லை. கொர்க்கி மாலை வேளைகளில் கோட் அணிந்து செல்லும் போது அவர் பொக்கற் நிறைய பணம் இருக்கும். ஆனால், வீடு திரும்பும்போது பொக்கற் வெறுமையாக இருக்கும். வழியில் எவரும் பணம் கேட்டால் கொடுத்து விடுவார். பல சிரமங்கள் மத்தியில் வாழுகின்ற ஏழைகளின் தன்மையையும் அடையாளப்படுத்தினார். அவர்களுடைய துயர் துக்கங்களை அறிந்திருந்தார். மிக உயர்ந்த நிலை அடைந்த பின்பும் கொர்க்கி பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே வாழ்ந்தார். அவர்கள் மேல் அவர் கொண்ட இரக்கம் அவருடைய கதைகளில் அடங்கியுள்ளது.

கொர்க்கியுடைய கிழிந்த சட்டை, அவரைக் கொலை செய்ய முயற்சித்த சார் அரசின் ஒற்றனை நினைவுபடுத்துகின்றது. socislesar புரட்சி எழுத்தாளர்களும் கொர்க்கியை கொல்வதற்குச் சதி செய்தனர். சதிகாரரின் கத்திக்குத்துக்கு அவர் இருதயம் இரையாகாததற்குக் காரணம் சட்டையில் இருந்த பணக்கத்தைதான்.

பாடசாலையில் 2ம் வகுப்பு மட்டுமே படித்த கொர்க்கி சுய முயற்சியினால் அறிவைப் பெற்றவர். தமிழகத்தின் முன்னாள் முதல்வரான காலஞ்சென்ற காமராஜரைப்போல படிக்காத மேதையாவார். இவர் ஓர் ஆசிரியரும் கலைஞருமாவார். சார் அரசுக்கு எதிராகப் போராடினார். புத்தி ஜீவிகளின் சுதந்திரத்துக்காகவும் போராடினார். இதனால் அரசினால் மாஸ் என்ற இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை இது. இருபத்தியாறு ஆலயங்கள் இருந்த அப்பிரதேசத்தில் ஒரு வாசிகசாலை கூட இருக்கவில்லை. அவர் ஒரு வாசிகசாலை அமைப்பதற்கான ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டார்.

1906 ம் ஆண்டு கொர்க்கி இத்தாலியிலிருந்து ரஷ்யாவுக்கு வந்தார். அவரை எப்போதும் ஒற்றர்கள் பின் தொடர்ந்தனர். மக்கள் அவருக்கு மதிப்பளித்து வந்தனர் கொர்க்கி எப்போதும் தாடிவளர்த்து மாறு வேடத்திலிருந்தார். இன்றும் மெக்சிம் கொர்க்கி புரட்சி நிறைந்த எழுத்தாளராகக் காணப்படுகின்றார். இலங்கை எழுத்தாளரான மாட்டின் விக்கிரமசிங்க 1962ம் ஆண்டு எழுதிய ரஷ்ய தேசத்தின் எழுச்சி என்ற புத்தகத்தில் மெக்சிம் கொர்க்கி பற்றி பாராட்டி எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தை **ஜோஜ் திசாநாயக்கா**




## மிலான் ராஜ சாசனம் : 313

திருச்சபையின் சுதந்திரயுகம் இதுவாகும். உரோமையக் கலாபனையின்போது துன்புறுத் தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும், திருச்சபைக்கும் ஒரு விடிவு கிடைத்தது இதனாலேயே ஆகும்.

போர் வெற்றியின் பின்னர் பேரரசின் நிலைமை பற்றி ஆராய 313 ம் ஆண்டு மாசி மாதம் பேரரசன் கொன்ஸ்தாந்தினும், சிற்றரசர் லிசினியுசுவும் மிலானில் சந்தித்தனர். பேரரசினுள் நிலவும் மத விவகாரம் பற்றி ஆராயப்பட்டது. இதன் விளைவாக இருவரும் இணைந்து வரலாற்றில் புகழ் மிக்கதோர் சாசனத்தைப் பிரகடனப்படுத்தினர். இது மிலான் தேசத்திலே இடம்பெற்றமையால் 'மிலான் ராஜ சாசனம்' எனப் பெயரிடப்பட்டது.

இச் சாசனத்தின்படி பேரரசினுள் வாழும் யாவருக்கும் மதச்சுதந்திரம் வழங்கப்பட்டது. அதாவது ஒவ்வொருவரும் தாம் விரும்பிய மதத்தை அனுசரிக்க முழுச் சுதந்தரம் வழங்கப்பட்டது. இதனால் நீரோ மன்னனின் காலத்திலிருந்து வந்த கிறிஸ்தவ மதத்துக்கு எதிரான தடைச்சட்டங்கள் நீக்கப்பட்டன. அஞ்ஞான மதத்திற்கு இருந்த சுயாதீனம் திருச்சபைக்கும் வழங்கப்பட்டது. கிறிஸ்தவர்களுக்குப் பாதுகாப்பும் அஞ்ஞானிக ளுக்கு துன்பங்களில் இருந்து பராமரிப்பும் கிடைத்தது.

மிலான் ராஜசாசனத்துக்கு முன்னரான பேரரசர் கலேரியுவினால் மனமில்லாது அரை குறையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 'சகிப்பு தன்மை யின் சாசனத்தை' விட இதனால் அதிக உரிமைகள், நன்மைகள் திருச்சபைக்குக் கிடைத்தன. ஆயர்க ளின் அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிறிஸ்தவர் கள் வழிபாட்டுக்காக முன்னர் கூடிய தனியார், பொது வழிபாட்டுத்தலங்கள் எவ்வித வரிச்சலுகைகளோ, வாடகையோ இன்றி உரியவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திருச்சபைக்குச் சொந்தமான நில புலங்கள், பொருட்கள், உடைமைகள் அனைத் தும் திருப்பிக் கொடுக்கப்பட்டன. உடைமைகளைப் பறிமுதல் செய்யும் பழைய சட்டங்கள் யாவுமே நீக்கப்பட்டன. ஆலயங்கள் நன்கொடைகளையும், சொத்து தானங்களையும் ஏற்றுக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. குருக்கள் வரி செலுத்தவோ பொது ஊழியம் புரியவோ வேண்டியதில்லை எனவும் அவர்களுக்கு சங்கை மரியாதை செய்ய வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டு, திருத்தந்தைக்கு நன்கொடையாக 'லாத்திரன்' எனும் மாளிகையும் உபகாரச்சம்பளமும் கொடுக்கப்பட்டது.

உரோமைய பிரஜைகளில் அரைப் பகுதி யினருக்கு இச்சாசனத்தின் மூலம் விடுதலையும் பிரஜா உரிமையும் கிடைத்தன. காலாபனையின் போது தகர்த்தெறியப்பட்ட ஆலயங்களுக்குப் பதிலாக பிரமாண்டமான ஆலயங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வழிபாட்டு முறைகளும் சடங்கு களும் திருவிழாக்களும் நற்கருணை ஆடம்பரப் பலிகளும் மக்களை இச்சாசனத்தின் மூலம் விசுவாசத்தில் உறுதிப்படுத்தின. ஞாயிறு விடுமுறை நாளாகவும் அத்தினத்திலே ஊதியம் பெறும் வேலைகளும் தடைசெய்யப்பட்டன.

இவற்றுடன் அரசர் கொன்ஸ்தாந்தின் அஞ்ஞானிகளின் அக்கிரமங்களையும் கண்டித்தார். பிறக்கும் சிசுக்கள் வெளியே எறியப்படக்கூடாதென வும் பலவீனமுற்ற அங்கவீனமுற்ற குழந்தைகளைக் கொல்லக்கூடாதெனவும் அடிமை வியாபாரத்தையும் சித்திரவதை செய்வதையும் சிலுவையில் அறைந்து கொல்வதையும் முடிவுக்குக் கொண்டு வந்தார். இவ்வாறான பல நன்மைகள் மிலான் ராஜசாசனத் தினால் திருச்சபைக்குக் கிடைத்தது. அதனால் இச்சாசனம் திருச்சபையில் ஒரு திருப்புமுனையினை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது.

*ஈழத்தை அளந்த புனிதன்*

வடமோடி நாட்டுக்கூத்து :

# மட்டக்களப்பு கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையின் முதல் நிகழ்வு

கலைக்கோட்டன் **அ. இருதயநாதன்** - செயலாளர்

மட்டக்களப்பு கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையின் முதலாவது நிகழ்வானது கடந்த 17.7.2011 அன்று மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி அரங்கில் பேரவையின் தலைவர் அருட்பணி றொஹான் பேணாட் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இலங்கையின் அப்போஸ்தலரான அருளாளர் யோசப்வாஸ் அடிகளது இறப்பின் 300வது ஆண்டு நிறைவு கண்டுள்ள இவ் ஆண்டில் அவரது வரலாற்றுச் சுருக்கம் பிரதேச கலைவடிவமான நாட்டுக் கூத்தாக அரங்கேறியது குறிப்பிடத்தக்கது.

முதலில் அதிதிகள் வரவேற்கப்பட்டதை அடுத்து திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேருள்தந்தை யோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை அவர்களின் ஆசியுரை நடைபெற்றது.

இலக்கியங்களூடாக கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புதல் என்னும் கொள்கைக்கு அமைவாக 'ஈழத்தை அளந்த புனிதன்' என்னும் வடமோடி நாட்டுக்கூத்து அமைந்திருந்தது. இதில் யாழ்ப்பாண கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் பயிலும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு மறை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், அதன் இயக்குனர் போல் றொகான் அவர்களின் தலைமையில் பாத்திரமேற்று நடித்தனர். இதனை மட்டக்களப்பைச் சேர்ந்த அன்பழகன் குரூஸ் அவர்கள் பிரதியாக்கம் செய்து நெறிப்படுத்தியிருந்தார். இவருக்குப் பக்கபலமாக மத்தள அண்ணாவியாரான திரு. ஞா. சண்முகலிங்கம் செயற்பட்டார்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வடமோடி நாட்டுக்கூத்து பிரபல்யம் பெற்றிருந்தாலும் யாழ். குருமட மாணவர்கள் மிகவும் சிறப்பாக தாங்கள் சொல்ல வந்த செய்தியைச் சொல்லியிருந்தார்கள்.

வடமோடி நாட்டுக்கூத்து மிகவும் சிறந்த தொரு கலை வடிவமாகும். இது படித்தவர், பாமரர் என்று பலர்மத்தியிலும் செல்வாக்குச் செலுத்தக் கூடியதொன்றாகும். இதில் வெண்பாவிருத்தம் சபை விருத்தம் தரு வசனம் அகவல், கொச்சகம் கந்தார்த்தம் என பல அம்சங்கள் உண்டு. குறுகிய



நேரத்தினுள் இவற்றின் சிலவற்றை உள்வாங்கி இக்கூத்து அரங்கேறியது சிறப்பானதாகும்.

மத்தளம் சிறப்பாகப் பேசியது. தாளம் தீர்மானங்கள் சுருளுக்கு ஏற்றவகையில் அமைந்தன. கிறிஸ்தவக் கூத்துக்குரிய தாளக்கட்டுகள் விடுபட்டுப் போனாலும் அமைந்திருந்த தாளங்கள் சமன் செய்தன. பங்கு கொண்ட குருமட மாணவர்களின் பிரதேச வழக்கிலுள்ள கூத்துகள் விலாசம் தென் மோடி, முல்லைமோடி, இசைநாடகம் என்பனவாகும். இவைகளின் செல்வாக்கு இவர்களின் ஆட்டங்களில் அவ்வப்போது வெளிப்பட முனைந்தாலும் வடமோடித் தாளத்துக்கு இவர்கள் கட்டுப்பட்டுக்கொண்டார்கள். எதிர்காலங்களில் இவர்கள் வடமோடியில் சிறந்து விளங்குவார்கள் என்பது நம்பிக்கை கொள்ளக்கூடிய விடயமாகும்.

இக்கூத்தினை மிகவும் உன்னிப்பாகவும் ஆர்வத்துடனும் எமது மதிப்புக்குரிய ஆயர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தனதுரையில்: 'மட்டக்களப்புக் கூத்து இதுவரையில் பலரினாலும் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது; இன்று அது அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது' என்றார் இது வரவேற்கப்படக் கூடியகருத்தாகும். இறுதியில் கூத்தின் விமர்சனம் இன்றி தனது கருத்தினைத் தெரிவித்த பேராசிரியர் திரு. மௌனகுரு ஐயா அவர்கள் கூத்தின் சிறப்பினைக் கூறினார்.


இந்நிகழ்வின் போது யாழ்ப்பாண மறை மாவட்ட சமூகத் தொடர்புத்துறை இயக்குனர் அருள் தந்தை போல் றொஹான் அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்புத்துறை இயக்குனர் அருள் தந்தை தமிழ் நேசன் அவர்களுக்கும் நினைவுப்பதாதைகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டது.

மூன்று தமிழ் மறைமாவட்டங்களினதும் கூட்டுமுயற்சியாக நடைபெற்ற இந்தக்கூத்து நிகழ்வு, மட்டக்களப்பை அடுத்து மறுநாள் திருகோணமலை யிலும் பின்பு மன்னாரிலும் நடைபெற்றது குறிப் பிடத்தக்கது.

எமக்குக் கரம் கொடுத்து எமது நிகழ்வி னைச் சிறப்பித்த யாழ் உயர் குருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கும் அதன் இயக்குனர் அவர்களுக் கும் மட்.கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை நன்றி கூறுகின்றது.



# மருத்துவம்



சோயா

தானிய வகைகளிலே சோயாபீன்ஸ் தனிச்சிறப்பு வாய்ந் ததாகக் கருதப்படுகின்றது. இதிலுள்ள மிக உயர்ந்த புரதம் மிகக் குறைந்த செறிவுள்ள கொழுப்பு காரணமாக ஒரு சிறந்த தாவர உணவு என்ற பெயரைப் பெற்றுள்ளது. இதனால்தான் மேல் நாட்டு உணவு வகைகளில் சோயா பீன்ஸ் உணவுகள் பெரிய இடத்தைப் பெற்றுள்ளன.

மேலும் அண்மைக் காலமாக சோயா உணவுகளில் ஐசோ∴பிளேவன்ஸ் அல்ல, பைட்டோ ஈஸ்ரோஜன்ஸ் என்னும் தனிச் சிறப்பு வாய்ந்த உணவு மூலகம் உயர்ந்த அளவுகளில் உள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

சோயாப் புரதம் நம் உடலிலுள்ள சீரம்கொலஸ்ரோலின் அளவுகளையும் குறைக்கின்றது. மற்றக் கொலஸ்ரோல் குறைந்த உணவுகளை விட சோயா உணவுகளை உண்டால் அதிகளவில் ஏறத்தாள பதின்மூன்று வீதமான தீமை செய்யும் அதாவது கரையாத கொலஸ்ரோல் குறைகின்றது; சோயா உணவுகளின் அளவுக்கு ஏற்ப கொலஸ்ரோல் குறைகின்றது.

மக்கள் உற்சாகத்துடன் ஆரோக்கியமாக வாழ சோயாப் பருப்புகள் பெரிதும் உதவுகின்றன. சோயாப் பருப்பில் நல்ல ஊட்டச் சத்துக்கு வேண்டிய பொருட்கள் மட்டுமின்றி, நார்ப் பொருட்களும் உயிர்ச்சத்துகளும் கனிமங்களும் அடங்கியுள்ளன. மனித உடல் நலத்துக்கு வேண்டிய அனைத்தும் இன்றியமையாத அமினோ அமிலங்களும் சோயாவில் இடம் பெற்றுள்ளன. சோயாப் பருப்பில் அதிக அளவு எண்ணெய் இருந்தபோதிலும் அது தரமான கொழுப்பாக அமைந்துள்ளது. சோயாப் புரதம் எண்ணிறந்த நன்மைகளைக் கொண்டுள்ளது. புற்று நோய்த் தடுப்பு, கொலஸ்ரோல் குறைப்பு, எலும்பு மென்பாட்டுக்கெதிரான செயற்பாடு, மதாவிடாயை ஒழுங்குபடுத்தல் என பல நன்மைகள் உள்ளன. ஆகவே சோயாவை உணவில் சேர்த்து ஆரோக்கியமாக வாழ்வோம்.

● ஓங்கார சித்தன்

# இறப்பினும் வாழ்வாள்



'தலையில நல்ல அடி. இரத்தம் அதிகமாகப் போயுள்ளது, தவிர கால் எலும்புகள் சரியான டமேஜாகியிருக்கு, முகத்தில் காயமில்லாத இடமே இல்ல, But அவயின்ர கடைசி விருப்பங்களை நிறைவேற்றுங்க'

இது அவசரப்பிரிவுச் சிகிச்சை நிலையத்தின் பெரிய டொக்டரது கனிவான வார்த்தைகள்.

'ஐயோ டொக்டர் எப்படியாவது என்ர அம்மாவை காப்பாத்துங்க'

இது மகள் ரோசியின் அழுகையுடன் சேர்ந்த பதற்றக்குரல் .....

ஆம், இவை அனைத்தும் அரையுயிருடன் சிலை போல் கிடத்தப்பட்டிருந்த செல்வராணியின் காதில் அரசல்புரசலாக விழுகின்றது. எனினும் ஒரு வார்த்தையேனும் அவளால் பேச முடியவில்லை. வலி, வலி, மரணவலி. அசையவே முடியாமல் உடல் இருக்க, உள்ளம் மட்டும் அளவுக்கு அதிகமாக அசைந்து, நடைபெற்றவைகள் அனைத்தும் அலைமோதின.....

'செல்வராணி அக்கா..... செல்வராணி அக்கா..... இந்த மாலைய வச்சிட்டு ஒரு பத்தாயிரம் தந்துதவுங்க அக்கா, மகளுக்கு இன்டர்வியுக்கு பணம் கட்டோணும். சரியா ஆறு மாசத்தில எடுத்திருவன்'

என்று கெஞ்சியபடி மாலையை நீட்டினாள் செல்வராணியின் தூரத்து உறவினளான மரியா.

'இஞ்ச கொண்டா பாப்பம் ஆ ..... இதுக்கு ஒரு ஏழாயிரம் தருவன் அதுலையும் ஆயிரம் வட்டி கழிச்சிட்டு தருவன் சரியா .....' என்றாள் செல்வராணி.

'சரி,சரி பரவாயில்லக்கா தாரத தாங்க மிச்சத்த பிரட்டிரன்'

'மரியா இப்ப காசு இல்ல நாளைக்கு வா கட்டாயம் தாரன்' என்றபடி மாலையுடன் அறைக்குள் சென்றாள் செல்வராணி.

சிறிய பெருமூச்சுடன் மெல்ல மெல்ல வெளியேறினாள் மரியா.

'ஏன் அம்மா காசு இருந்தா குடுங்களன் அவய ஏன் நாளைக்கு வரச் சொல்றீங்க, பாவந்தானே மரியா அன்ரி'

'சும்மா போ.... அன்ரியாம் அன்ரி; ஈட்டு நகைக்கு உடனே காசு குடுக்கக் கூடாது இழுத்துக் கொடுத்தாத்தான் பணத்திர அருமை அவங்களுக்கு புரியும் இதில நீ தலையிடாத போய் உண்ட வேலையைப் பார்' எனறாள் தாய்.

'ரோசி....... ரோசி........'என்றவாறே உள்ளே வந்தாள் ரோசியின் நண்பி.

'ஜெனி..... வா... வா என்ன விசயம்' என்றபடி வரவேற்றாள் ரோசி.

'ஒண்டுமில்ல உங்கட அம்மாட்டத்தான் வந்தன்'

'ஏன் பிள்ள என்ன விசயம்' என்ற படி அருகில் வந்தாள் செல்வராணி.

'அன்ரி அம்மா சொன்னவ எண்ட நகைய ஈடு வச்சு ஒருவருசமாச்சாம். வார மாசம் சீட்டு எடுத்து முதலும் வட்டியும் தந்திட்டு எடுக்கிறாவாம்'

'என்ன பிள்ள உண்ட அம்மாக்கு பைத்தியமா? அந்த நகையெல்லாம் போன மாசமே அறுதியாகிட்டுது, அத வித்திட்டு எண்ட காச நான் எடுத்திட்டன். ஒருவருசத்தில எடுக்காட்டி அறுதியாகிடும் எண்டு சொல்லித்தானே பணந் தந்தனான் போய் உண்ட அம்மாட்ட சொல்லு' என்ற செல்வராணியை வாயடைத்து பார்த்துக் கொண்டிருந்த ஜெனியை தட்டினாள் ரோசி.

சிறுகதை

'என்ட அம்மாவத் தெரியுந்தானே ஒரு தரம் சொன்னா சொன்னதுதான், கடவுளே வந்தாலும் மாறமாட்டா, நீ வீட்டுக்கு போய் விசயத்த சொல்லு' என்று ஆறுதல் கூறி அனுப்பினாள் ரோசி.

செல்வராணி என்ற பேருக்கு ஏற்றாற் போல் செல்வச் செழிப்பில் மூழ்கிக் கிடக்கிறாள் மாடி வீட்டு உலோபி. நாள் தவறாது பூசைக்குக்குப் போவதும், நற்கருனை உட் கொள்வதும் ஒரு போதும் குறை யாது. கணவனோ வெளிநாடு, அந்தப் பணம் வேறு. தவிர ஆசைக்கும் ஆஸ்திக்கும் ஒரே யொரு மகள். மகளோ தாய்க்கு எதிர்மாறானவள். இரக்கம், பாசம், பக்தி, பணிவு என்பன அளவுக்கு அதிகமாகவேயுடையவள். தாய், நகை ஈடு பிடித்து அறுதியாக்கும் தொழிலை அடியோடு வெறுப்பவள். எவ்வளவு எடுத்துக் கூறினாலும் அசட்டையாக எடுக்கும் தாயின் மேல் அன்பு கொண்டாலும் வெறுப்பே அதிகம்.

பணம்.... பணம்.... வாழ்கையே பணம் மட்டுந்தான் என்று தனக்குத்தானே சிறு வட்டமிட்டு வாழும் தாயுடன் வேண்டா வெறுப்புடன் சொல்கின்றாள்.

'அம்மா ஜெனி பாவம், அவளுக்கு நல்ல இடத்தில கல்யாணம் முற்றாயிருக்கு. அவங்க "போடப்பட்ட நகை மட்டும் போதும்" என்டு சொன்ன படியால தான் உங்களிட்ட கெஞ்சுதுகள் ஜெனியிட அப்பாட வைத்தியத்துக்காகத் தானே உங்களிட்ட நகையெல்லாம் ஈடு வச்சவங்க, அதக் குடுங்களன் உங்களால, ஒரு ஏழைப்பிள்ளையிர கல்யாணம் நடக்கிறது என்ட பேரும் வரும் பிளீஸ் அம்மா'

ரோசியை கோபத்துடன் பார்த்த செல்வராணி. 'இங்க பாரு ரோசி இதுல நீ தலையி டாத; எத்தின வருக்ஷமா இந்த வேலையச் செய்து வாரன். அறுதியான நகையெல்லாம் ஆருக்கு உனக்கு தானே சேர்க்கிறன். அது தெரியாம சும்மா கதைக்காத'

'ஐயோ அம்மா இந்த பாவப்பட்ட ஏழைகள்ற ஒரு கிராம் தங்கம் கூட எனக்கு வேணாம். கிலோக் கணக்கில வச்சிருக்கிற நகைய நீங்களே எடுங்க, அந்தப் பாவத்த என்னால சுமக்க ஏலாது' என்ற படி ஞாயிறு திருப்பலிக்குச் செல்ல ஆயத்தமாகிறாள் ரோசி.

'சரி நானும் வெளிக்கி டோனும் இந்தக் கதையெல்லாம் கதைக்கக்கூடாது சரியா' என்ற செல்வராணி திருப்பலிக்கு ஆயத்தமானாள். பூசை முடிந்து வந்த செல்வராணியின் வாய் முணு முணுத்தபடி இருந்தது.

'இந்த பாதருக்கு வேற வேலையில்ல, ஏழைகளுக்கு உதவி செய்யுங்க, லிஸ்டில கூட காசு போடுங்க, புது உடுப்பு தாங்க என்டு கேட்டா நாங்க எங்க போறது, எவ்வளவு செய்தாலும் இன்னும் இன்னும் என்டு சொன்னா எப்பிடி?'

'ஏனம்மா உள்ளவங்க தான் இல்லாதவங்களுக்குக் கொடுக்கவேணும். உங்களிட்ட நிறைய இருக்கு கொடுக்க வேண்டியதுதானே'

'கஷ்டப்பட்டு சேர்த்த காச சும்மா ஏழை எளியவனுக்கு வாரி வாரி குடுத்துட்டு நான் என்ன பிச்சையா எடுக்கிறது'

'அம்மா இண்டைய வாசகம் பார்த்திங்களா! பகிர்ந்து வாழ்றத பற்றி எவ்வளவு அழகா கூறப்பட்டிருந்தது'

'ஆண்டவர் என்ன சொன்னார், 'உள்ளவர்களுக்கு மேலும் கொடுக்கப்படும் இல்லாத வரிடம் இருந்து இருப்பதும் எடுக்கப்படும்' அதத்தான் என்ட விசயத்தில ஆண்டவர் எனக்கு செய்கிறார்' என்ற படி அமர்ந்தாள் செல்வராணி.

'ஐயோ அம்மா அதிர அர்த்தம் வேற, உங்கட பாவச் செயலுக்கு அத ஒப்பிடாதீங்க. நாங்க வாழும் போதே பேசப்பட வேணும், செத்த பிறகும் பேசப்பட வேணும். அன்னை தெரேசாவை பாத்தீங்களா அவட வாழ்வையும் சேவையையும் உலகமே பேசுதே... நாளைக்கு ஒரு சுனாமியோ பூகம்பமோ வந்தா இந்தப் பணம் பொருள் எல்லாம் என்னவாகும்? உங்களுக்கு எப்ப ஞானம் வரப்போகிதோ? எப்ப



மனம் திரும்ப போறீங்களோ' என்ற மகளை வெறுப்புடன் பார்த்த செல்வராணிக்கு சுள்ளென ஏதோ குத்தியது போன்ற உணர்வு, சற்று கண்ணைத் திறந்தாள் டொக்டர் ஊசி ஏற்றிக் கொண்டிருந்தார். அவளது கண்களில் இருந்து கண்ணீர் வடிகின்றது. அது ஊசியின் வேதனையா? அல்லது மனவேதனையா? கண்ணீரைத் துடைக்கும் ஜெனியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறாள். மெல்ல மெல்ல கண்கள் பனிக்கின்றன, நினைவு கள் அலைபாய்ந்தன.

'ரோசி ஆட்டோக்கு போன் பண்ணு நகைக்கடைக்கு போகோணும்'

'ஏனம்மா ஜெனியிட நகைய விக்கவா?'

'இல்ல அஞ்சு பவுன் நகைய குடுத்திட்டு ஒரு புது நெக்லஸ் எடுக்கபோறன்'

'வேணாம் அம்மா, ஜெனிட அம்மா என்னட்ட கதைச்சவ எப்படியாவது உங்களிட்ட பேசி நகைய திருப்பி தரச் சொன்னவ, பிளீஸ் அம்மா அத குடுங்களன்'

'அறைஞ்சனென்டா பல்லுக் களரும் உன்ட வேலைய மட்டுந்தான் நீ பாக்கோணும்' என்றபடி வெளியேறினாள் செல்வராணி.

ஆட்டோ மிக வேகமாகச் சென்ற காரணத் தால் முன்னால் வந்த வேனுடன் மோதி பிரண்டு, உருண்டு பெரிய விபத்தில் முடிந்தது.

உருண்டு பிரளும் போது ரோசியின் வார்த்தைகள் செல்வராணியின் உள்ளத்தில் உருண்டுருண்டு உறைந்து போன நிலையில் செல்வராணி வெறும் ராணியாகக் கட்டிலில்......

'அம்மா நாங்க வரும் போதும் ஒண்டும் கொண்டு வரல்ல, போகும் போதும் ஒண்டும் கொண்டு போறல்ல, இருந்தாலும் ஊர் பேசோணும், இறந்தாலும் ஊர் பேசோணும்'

என்ற குரலொலி திரும்பத் திரும்பச் செல்வராணியின் காதிலும் உள்ளத்திலும் ஒலிக்க மெல்ல கண்களை திறந்தாள்.

அருகில் ரோசி, ஜெனி, ஜெனியின் தாய் மேரி மற்றும் மரியா ஆகியோர் சுற்றிவர கவலை தோய்ந்த முகத்துடன் இருந்தனர்.

மெல்ல ஒரு பேப்பரும் பென்னும் கொண்டு வருமாறு சைகையில் பேசினாள்.

டொக்டர் அவர்களுக்கு, மரணத்தின் இறுதித் தருவாயில் இருக்கும் செல்வராணியாகிய நான் என் சுய நினைவுடனும் விருப்பத்துடனும் அறியத் தருவது எனது உடல் உறுப்புகள் எவையேனும் ஏழை நோயாளிகளுக்குப் பொருந்துமாயின் அவற்றை எடுத்துப் பொருத்தவும். வாழும்போது மனிதனை மதிக்காத நான் சாகும்போதாவது மனிதனை மதிக்க அருள் தந்த இறைவனுக்கு என் நன்றிகள். என் கடைசி ஆசைக்கு எனது கணவரும் மகளும் சம்மதம் தெரிவிப்பார்கள் என நம்புகின்றேன். என்னுடல் உறுப்புக்களை தானம் செய்கின்றேன்.

உண்மையில் மனமாற்றமடைந்த,

S. செல்வராணி.

கடிதத்தைப் படித்த ரோசியோ 'ஐயோ அம்மா உங்கள நினைச்சா எனக்குப் பெருமையா இருக்கு' என்றபடி தாயைக் கட்டி அணைத்துத் தேம்பித் தேம்பி அழுதாள்.

"என் உயிருள்ள தேவ வார்த்தையை வாசிக்கும் எவனும் ஒருபோதும் சாகான். அவன் இறப்பினும், (என்னுடன்) உயிர் வாழ்வான்" என்ற வேத வசனங்கள் செல்வமேயற்ற வெறும் ராணிக்கு மன நிறைவைக் கொடுக்க மெல்ல மெல்ல கண் மடல்கள் பணிந்தன......

கவலை தோய்ந்திருந்த ரோசியின் முகத்தில் இனந் தெரியாத பிரகாசம் வீசத் தொடங்கியது. வாழும் போது பேசப்படாத எனது தாய் சாவின் பின் பேசப்படுவாள். இறைவனுக்கு டையவள் ஆவாள் என்ற பிராகாசமே அது.

திருமதி. ரஜனி ஈஸ்வரன்



## குறும்(புப்)பா - 65

விண்ணுயர ஏறும் விலை வாசி
வெற்றி நிதம் பேசிடுவார் யோசி
மண்ணரசின் மகிமையிலே மடி சேர்க்கும் அரசர்க்கு
மண் வாழும் மக்கள் வெறுந் தூசி

~ மலர் ~

பேரருட்தந்தை பொன்னையா யோசப் ஆண்டகை



அதிகார ஆட்சியா?
அன்புப் பணியா?



# இன்றைய உலகில் திருச்சபையைப் புரிந்துகொள்வது எங்ஙனம்?

'செபி- செவிமடு - கொடு' என்கிற மந்திரம் தவிர வேறு எதுவும் பொது நிலையினருக்குச் சொல்லித்தரப்படவில்லை.

'இயேசுவின் நல்ல ஆயன் உவமை, திரு ஆட்சியாளர்கள் இறை மக்களை ஆட்டு மந்தைகளாக நடத்துவதற்கு வசதியாகி விட்டது'

'திருத்தந்தை தலைமையிலிருந்து படிப் படியாக வந்து அடிமட்டம் வரை அமைக்கப்பட்டுள்ள 'பிரமிட்' கட்டிட முறையிலான நிர்வாக அமைப்பு முறைகள் எப்போது தலைகீழான மாற்றம் பெறுகிறதோ, அன்றுதான் திருச்சபையின் விடியலாகும்'.

மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் திருச்சபையை விழித்தெழச்செய்யும் சவால்களாகும். அரைகுறை விசுவாசமுள்ளவர்கள் ஆறுதல் பெற பிறசபைகளைத்தேடி ஓடுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்து விடுகின்றது. இன்று திருச்சபை ஒரு நிறுவனமாக, மண்ணில் இருக்கும் இயங்கும் அதிகார அமைப்பாக, அரசாட்சியாக தன்னை வெளிப்படுத்துகின்றது.

இறைமகன் இயேசுவே திருச்சபையை நிறுவினார்: அதன் தலைவர்களாக பேதுருவையும், திருத்தூதரையும் ஏற்படுத்தினார். அவர்களுக்குப் பின் வாழையடி வாழையாக அந்த இறை அதிகாரத்தைப் பெறுபவர்கள் அவர்களுடைய வழித் தோன்றல்களான திருத்தந்தையும் ஆயர்களும். அவர்கள் தங்கள் அதிகாரத்தைக் குருக்களுடனும் திருத்தொண்டர்களுடனும் பகிர்ந்து கொள்கின்றனர். ஆனால், இயேசு ஆரம்பித்தது நிறுவனம் அல்ல. அது ஒரு மக்கள் இயக்கம். அவர்களது உருவாக்கப் பயிற்சியிலே அவர் அறிவுறுத்தியது: 'பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகின்றவர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றார்கள். அவர்களுக்குள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள், ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது; உங்களுக்குள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்.' (மாற்.10:42-43)

இயேசுவின் இறப்பு, உயிர்ப்பைத் தொடர்ந்து தொடக்ககாலத் திருச்சபையில் திருஆட்சியாளர்கள், பொதுநிலையினர் என்ற வேறுபாடு இருக்கவில்லை. கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒரே உடலாய் ஒருங்கே நின்று, எவ்வித பேதமும் இன்றி கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தனர். 'ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர்... எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது... இயேசு உயிர்தெழுந்தார்' என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர். (தி.ப.4:32-37)

நான்காவது நூற்றாண்டில் திருச்சபை நன்றாக வளர்ச்சி பெற ஆரம்பித்தது. திருச்சபை உறுப்பினர்கள் அதிகமாயினர். அப்படியே திருச்சபையின் சொத்துகளும் அதிகரித்தன. சொத்துகளைப் பராமரிப்பது திருச்சபைத் தலைவர்களின் கடமையானது. வசதிகளும் செல்வங்களும் பெருகப்பெருக திருச்சபை படிப்படியாக நிறுவனமயமாகியது. நிறுவனமாகிக்கொண்டிருந்த திருச்சபைக்கு உரோமைய அரசன் கொன்ஸ்டன்டைனின் ஆட்சி ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அவன் கிறிஸ்தவ மதத்தை அரசமதமாக அறிவித்தான். திருச்சபை அதிகாரம் நிறைந்த

நிறுவனமயமாகியது. ஆன்மீகத்தலைவர்கள் எனக் கருதப்பட்டோர் அரசியல் அந்தஸ்துப் பெற்றனர்.

மக்களைச் சொர்க்கத்தில் சேர்ப்பதுவே திருச்சபையின் தலையாய அக்கறையாக இருந்த தால், மக்களின் இவ்வுலக வாழ்வு சார்ந்த அன்றாடப் போராட்டங்கள், அடிமைத்தனங்கள் பற்றி, சமூக அநீதிகள் பிரச்சினைகள் பற்றி அதிகம் அது அக்கறை காட்டவில்லை. இதனால் தான் 19ம் நூற்றாண்டுவரை அடிமைத்தனத்தை அதிகார பூர்வமாகத் தண்டிக்க திருச்சபை முன்வரவில்லை.

உலக நாடுகளைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த ஸ்பெயின், போர்த்துக்கல் அரசர்களுக்கு உரிமை தருவது 15ம் நூற்றாண்டில் திருதந்தை 6ம் அலெக்சாந்தருக்குச் சிறிதும் அநீதியான செயலாகப்படவில்லை.

இதுபோன்றே அதிகார ஆதிக்கம், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றினால் திருச்சபைக்குக் கிடைத்த அபகீர்த்திகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆயினும் பிறருக்குப் பணிபுரிவதே கிறிஸ்தவத்தின் உண்மையான தலைமைப்பணி எனக் கருதப்படுகின்றது. அதிகாரமும், வல்லமையும் ஆதிக்கத்திற்காக அல்ல, மாறாக சேவைக்காகவே: சேவை செய்யவே தலைமைப்பணிபுரிவதாகும்.

திருமுழுக்குப் பெற்ற அனைவரும் இயேசு வின் முப்பெரும் பணிகளில் பங்கு பெற்றவர்களே. இயேசுவின் பணியைத் தொடரும் பொறுப்பு அனைவருக்கும் சமமானதே. இதையே 2ம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியில் புதுப்பிக்கப்பட்ட திருச்சபைச் சட்டம் தெள்ளத் தெளிவாக எடுத்து ரைக்கின்றது: 'கிறிஸ்துவில் பெற்ற புதுப்பிறப்பின் காரணமாகக் கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவருக்கு மிடையே மாண்பிலும் செயற்பாட்டிலும் உண்மை யான சமத்துவம் நிலவுகின்றது' (புதிய திருச்சபைச் சட்டத் தொகுப்பு, எண் 208).

எனவே, திருச்சபையின் உறுப்பினர்களின் பணிகள் வெவ்வேறாகலாம் ஆனால் பொறுப்பு எல்லாருக்கும் சமமானதே. அலுவல்கள் வேறாகலாம் ஆனால் அழைப்பு எல்லாருக்கும் இணையானதே. அருங்கொடைகளை இனங்கண்டு அவரவர் தகுதிக்கும் திறமைகளுக்கும் ஏற்ப பணிசெய்ய ஊக்குவிப்பது, அவற்றை பகிர்வது, அனைவருட னும் ஒத்துழைப்பது, அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைப்பது, வட்டவடிவமாகக் கலந்துரையாடி காரியங்களை நடாத்தும் திருச்சபையைக் கனவு கண்டது வத்திக்கான் சங்கம். இவ்வாறு 2ம் வத்திக்கான் சங்கத்துக்கு முன்பு திருச்சபையில் இருந்த பிரமிடு அமைப்பு தலைகீழாக மாறும் நிலை ஏற்படுகின்றது.

## ஆண்டு தோறும் நடைபெறும் வேள்வி

1956 ல் தொடங்கியது இந்த வேள்வி
ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.
இன்றும் அது தொடர்கிறது, இனியும் தொடரும்.
1956 ஜூன் 5ம் தேதி காலிமுகத்திடல்
சத்தியாகிரகிகள் மீது நடாத்தப்பெற்ற
இவ் வேள்வி, அதன் பின்–
1957, 1958, 1960. எனத் தொடர்ந்தது
ஈற்றில் யூலை 1983ல் கொழும்பிலும்
சுற்றுப்புறங்களிலும் அதிகோரமாக
இவ்வேள்வி நடாத்தப்பெற்றது
ஆனாலும், இவ்வேள்வியின் ஆகுதிகள்
பீனிக்ஸ் பறவைகளாகி
இன்றும் நடமாடுகின்றன.

அமைச்சர்கள் பலர் இந்த வேள்விகளை
முனைந்து நடாத்தினர். அதில் ஒருவர்
யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை
ஆகுதியாக்கினார். என்னே மதிநுட்பம்!
மக்கள், அவர்கள் வீடுகள்,
வர்த்தக நிலையங்கள் அனைத்தும்
ஆகுதிப் பொருட்களாகின
அரச கடவுள் இவற்றையெல்லாம்
பார்த்துக்கொண்டு சும்மா இருந்தார்.
வேள்விகளைத் தடுக்கவோ
வேள்வி நடாத்தியவர்களைத்
தண்டிக்கவோ எதுவும் செய்யவில்லை.
வேள்வியில் பாதிக்கப்பட்டவர்கள்
தாங்களே முக்கி,முனங்கி எழுந்து
இன்று நடமாடுகின்றனர்.
இன்று வேள்வி எப்படி நடைபெறுகின்றது?
எந்தவித பிரச்சினையும் இல்லாமல்
அரச கடவுளே அவற்றை நடாத்தி முடிக்கிறார்.

● தமிழன்பன்




## வாசிப்பு

அமிழ்தினும் ஆற்ற இனியது நம் தமிழ்மொழி. இம் மொழி காலத்தாலும் ஆற்றலாலும் முந்தியது. அரிய சிறிய கருத்து நயம்மிக்கது, சொற்செட்டுடையது, மெல்லிய இனிய சொற் குழுமங்களைக் கொண்டது. இச் சிறப்புக்களை யெல்லாம் ஒருங்கே கண்ணாடி போல் தெளிவுறக் காட்டுவன சங்கநூற் செல்வங்கள்.

அவை எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என முப்பத்தாறாம். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தால் சிறிது பிற்பட்டவை. அதனால் அவை சங்கமருவிய நூல்கள் எனப்பிரித்து ஓதப்படுகின்றன. இவ்வாறு சங்க இலக்கியம் வழங்கும் 'பத்துப்பாட்டு' என்னும் தனது நூலிற்கான முன்னுரையில் முனைவர் வித்துவான் எம். நாராயணவேலுப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள்.

தற்போதுள்ள தலைமுறையில் அநேகம் பேர் வாசிப்பதற்காகச் செலவிடும் நேரம் மிகவும் குறைவு. அப்படி வாசிப்பதென்றாலும் மேலோட்டமான வாசிப்பாகவே அது காணப்படும். மேலேயுள்ள பந்தியினை எம்மில் எத்தனை பேரால் முழுமையாக விளங்கிக்கொள்ள இயலும்?

வாசிப்பு முறைகளில் நான்கு வகைகள் காணப்படுகின்றன

1. உடன் தேடல் அல்லது உசாவுதல் (Scanning)
2. சாராம்சம் அல்லது பிழிவைத் தேடுதல் (Skimming)
3. தெளிவான விளக்கத்தைப் பெற முழுமையாக வாசித்தல் (Reading for under standing or full Comprehension)
4. திறனாய்வு செய்தல், மதிப்பிடல் என்பவற்றை இலக்காகக் கொண்டு வாசித்தல் (Reading for Critical evaluation)



### - உடன்தேடல்

தரப்பட்ட விடயத்தில் ஒரு குறிப்பிட்ட தகவலை மாத்திரம் தேடுவதனை இலக்காகக் கொண்டது. அவ்விடயம் தொடர்பாக மட்டுமே எம் கவனம் குவிக்கப்பட்டிருக்கும், ஏனைய விடயங்கள் புறந்தள்ளப்படும். விடயம் கிடைத்ததும் வாசிப்பு நிறுத்தப்பட்டுவிடும். இதற்கு மொழிப் பாண்டித்தியம் தேவையில்லை. வாசிக்கும் வேகம் இங்கு அதிகமாகக் காணப்படும். அகராதியொன்றில் ஒரு சொல்லின் பொருள் அறியத் தேடுதல், தொலைபேசியின் விபரக்கொத்தின் முகவரி, இலக்கம் என்பன தேடல் போன்ற இவ்வகை வாசிப்பிற்கு உதாரணமாகும்.

### - சாராம்சம் தேடல்

விடயமொன்றின் சாராம்சம் அல்லது கருப்பொருளை அல்லது மையப்பொருளை இலக்காகக் கொண்டு வாசிப்பதனை குறித்து நிற்கும். பிரதான விடயத்தில் மட்டும் கவனம் செலுத்தி வாசிப்பது அவசியமானது.

### தெளிவான விளக்கம் பெற முழுமையாக வாசித்தல்

இதற்குத் தரப்பட்டுள்ள பகுதிமுழுவதும் முழுமையாக வாசிக்கப்பட வேண்டும். தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் முழுமையாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அத்தகவல்களைக் கொண்டு அனுமானங்களையும் முடிவுகளையும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

கப்பல் ஒன்றின் வேகம் செல்லும் நேரம் செல்லும் திசை என்பன தரப்பட்டால், அக்கப்பல் பயணம் செய்த தூரம் சென்று கொண்டிருக்கும் கடற்பகுதி என்பன கணக்கிட்டு கூறப்படுதல் இவ் வாசிப்பிற்கான நல்ல உதாரணமாகும்.

### - திறனாய்வு

நாம் வாசிக்கும் விடயம் தொடர்பான நமது கருத்தினைக் கூறும் நோக்குடன் வாசிக்கும் வாசிப்பு, வாசித்த விடயத்தினை தர்க்கித்தல், நியாயம் காணல் என்பன அடங்கும். மிகக் கடினமான வாசிப்பு நுட்பம் இது. விடயத்தை விளங்குவதுடன் தீர்ப்பையும் கூற வேண்டிய நிலை வாசகருக்குண்டு. குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அபிப்பிராயம் என்ன? இம்முடிவு சரியானதா? ஏற்றுக்கொள்ளக் கூடியதா என்று திறனாய்வு செய்யக் கூடியதாக வாசிப்பு இருக்க வேண்டியது அவசியம். ○ ○ ○



# புழுக்களாய் பூச்சிகளாய்

குட்டி முயல்கள்
முட்டை போடும்
கலைமான்களுடன்
வரிப்புலிகள் பல
துள்ளி விளையாடும்
கொட்டும் பனியில்
குதித்துத் திரியாதே
பாம்புகள் பல்லிளித்து
புத்தி கூறும் தவளைகளுக்கு
சிங்கங்களுக்குச்
செட்டை முளைக்கும்
மனித உயிர்களுக்கு
வால்கள் கூட வந்து விடும்.

ஓ...
சிரிப்பு... ஒரே... சிரிப்பு
வால் முளைத்த மனிதர்களை
நேற்றும் கண்டேன்
இன்றும் கண்டேன்
அதிகார விஷம்
அங்கமெல்லாம் பரவியேற
வால் முளைத்து வந்ததே
அங்கும் இங்கும் துள்ளியோடி
வாலற்ற மனிதர்களை
வசைபாடித் தொலைத்தனர்

தக்கன பிழைத்தலும்
அல்லன மடிதலும்
தரணியின் விதிதான்
அதற்காக இப்படியா....

உதடுகளசையு முன்
ஒப்பாரி வைக்கவும்
கண்ணசைவு தெறிக்குமுன்
கண்ணீர்ப் புகை மூட்டவும்
யதார்த்த பேனாக்களுக்கு
மூடிகள் இறுக்கவும்
விடியல் சேவல்களின்
குரல் வளை அறுக்கவும்
இன்னும் இன்னுமாய்
ஏராளம் ஏவல்கள்
ஜனநாயக ஓட்டுக்குள்
தலை நீட்டும் ஆமைகளாய்
நீருக்கான நெருப்பும்
உண்மைக்கான பொய்யும்
சமாதன யுத்தமும்
சாத்தியமே எங்களுக்கு
சாத்தான்கள் ஓதின.

ஏதிலிகள் நாங்களானோம்
ஏது செய்ய வகையறியோம்
கடவுள்கள் நீங்கள்
காப்பீர் எங்களைத்தான்
என்றழுத புழுக்கள் முன்
எம்பிக் குதித்தனர்
எங்களை நம்புங்கள்
உங்களது காவலர்கள்
வால் முளைத்த ரட்சகர்கள்
என்று பறை சாற்றினர்.

வரலாற்றின் கணக்குகளில்
வழி தவறிப் போனோராய்
பல்லாயிரம் பாவியர்கள்
பரிதாபமாய் மாண்டு போனார்.
பூச்சிகளுக்கும் புழுக்களுக்கும்
நாய்களுக்கும் நரிகளுக்கும்
கணக்கென்ன........?
கதையென்ன......?

பைந்தமிழ்க்குமரன் டேவிட்
பாண்டியிருப்பு - 01
கல்முனை




இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக காத்தான்குடி 6ம் குறிச்சியில் அமைந்துள்ள மட்/சாகிரா விஷேட பாடசாலையின அதிபர் ஜனாப்.ஏ.அன்வர் சாதிக் அவர்களைச் சந்தித்தோம். மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் புனித வின்சட் டீ போல் சபையினால் நடத்தப்படும் ஓசானம் இல்லம் போன்ற ஓர் அமைப்பே மட் /சாகிரா விஷேட பாடசாலையாகும். எனினும் இரண்டுக்கும் பாரிய வேறுபாடுகள் உண்டு. ஓசானம் இல்லம் முற்றிலும் பரோபகாரிகளின் தயவில் நடைபெறும் அமைப்பாகக் காணப்பட சாகிரா விஷேட பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களோ அரசாங்க நியமனம் பெற்றவர்கள்; இவர்கள் இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்கள். மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்துக்குட்பட்டவர்கள்.

இப் பாடசாலையை பார்த்து நிர்வாகம் செய்பவர்கள் யார் என்று நாம் அதிபர் ஜனாப் ஏ.அன்வர் சாதிக் அவர்களிடம் கேட்டோம்.

'கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பு' என்ற நிறுவனமே இப் பாடசாலையை நடத்தி வருகின்றது. 1995 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 2001ம் ஆண்டு மேமாதம் 21 ம் திகதி இது பதிவு செய்யப்பட்டது என்று சொன்னார்.

'இங்கு எத்தனை மாணவர்கள் கற்கின்றார்கள்?' என்று நாம் வினவியபோது, தற்போது 37 மாணவர்கள் கற்கின்றனர் என அவர் குறிப்பிட்டார். சம்மாந்துறை,நிந்தவூர், ஏறாவூர், இறக்காமம்,பிபிலை மற்றும் பொலனறுவை போன்ற இடங்ளைச் சேர்ந்த 10 மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிக்கின்றார்கள். ஒரு பெரிய காணியில் இரண்டு கட்டிடங்கள் காணப்படுகின்றன. ஒன்று 'கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின்' அலுவலகம்; இது முழுமை பெற்ற இரண்டு மாடிக் கட்டிடம். இதில்தான் விடுதியும் காணப்படுகின்றது. மற்றைய கட்டிடம் முழுமை பெறாத பாடசாலைக் கட்டிடம். போதுமான அளவு தண்ணீர் வசதி, சீரான மின் வசதி என்பன பாடசாலை கட்டிடத்திற்குக் கிடையாது. இப்பாடசாலையில் பத்து ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள். பாடசாலைக்கென்று முச்சக்கர வண்டியொன்றும் உண்டு.



இப் பாடசாலையில் எத்தனையாம் வகுப்பு வரையுண்டு என நாம் கேட்ட போது.

முதலாம் வகுப்பு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை உண்டு என அதிபர் கூறினார்.

1ம், 2ம் வகுப்புகளில் மந்த புத்தியுள்ள பிள்ளைகள் கற்கின்றார்கள். 3ம், 4ம். 5ம் வகுப்புகளில் வாய்பேச இயலாதவர்கள், மனோ வளர்ச்சி குன்றியவர்கள் படிக்கின்றார்கள்.

இங்கு ஐந்து வகையான விசேட தேவையுள்ள பிள்ளைகள் கற்கின்றார்கள்

1. மெல்லக் கற்போர்
2. டவுன் சின்ரோம்
3. எபலப்சி (பிடிவாதம் பிடிப்பவர்கள், வலிப்பு நோயுள்ளவர்கள்)
4. ஒட்டிசம் (ஒரே இடத்தில் இருக்க மாட்டார்கள் ஓடித்திரிவார்கள்)
5. மனோவளர்ச்சி குறைந்தவர்கள்.

காலை 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பமாகின்றது.

உடற்பயிற்சியும் சமய வழிபாடும் சொல்லித் தரப்படுகின்றது. பின்னர் மு.ப 8.00 மணி தொடக்கம் மு.ப 10.00 மணிவரை பொருத்தமான கற்பித்தல் இடம்பெறுகின்றது. 10.00 மணிதொடக்கம் 10.30 மணிவரை இடைவேளை, அதில் அவர்கட்கு கடலை போன்ற உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. 10.30 மணிதொடக்கம் 12.00 மணிவரை தொழிற் பயிற்சி வழங்கப்படுகின்றது. கடதாசி வேலைகள், தையல் வேலைகள் என்பது தொடர்பான பயிற்சிகளே வழங்கப்படுகின்றன. 12.00 மணி தொடக்கம் 12.20 மணிவரை நண்பகல் தொழுகை இடம்பெறும். பின்னர் 12.20 மணிதொடக்கம் பி.ப 1.00 மணிவரை விளையாட்டு நடைபெறும். கிரிக்கட், வலைப்பந்து, சங்கீதக்கதிரை போன்ற விளையாட்டுகள் விசேட தேவையுள்ள பிள்ளைகட்கு ஏற்றவாறு பயிற்றுவிக்கப்படும். இறுதியில் அனைவருக்கும் நண்பகல் உணவுண்டு.

பாடசாலை விட்ட பிறகு பிள்ளைகளின் நிலைமையைப் பற்றி அதிபர் விளக்கினார்.

அண்மையில் உள்ள பிள்ளைகள் பாடசாலை முச்சக்கர வண்டி மூலம் வீடு செல்வார்கள். ஏனைய பிள்ளைகளை 'நலன்புரி அமைப்பு' பொறுப்பேற்றுக்கொள்ளும். பிள்ளைப் பராமரிப்பாளர் ஒருவர் அங்கிருக்கின்றார்.

பிள்ளைகளைப் பெற்றோர் பாடசாலையில் இணைத்து விட்டு சென்றுவிட்டார்களென்றால் பின்னர் பெற்றோருக்கும் நிறுவனத்திற்கும் தொடர்பு இல்லை, அதே போன்று பாடசாலையுடனும் அவர்கள் தொடர்பு கொள்வதில்லை என அதிபர் கவலைப் பட்டார். இப் பிள்ளைகளுக்குத் தொண்டு நிறுவனங்கள் வழங்கும் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும் பெற்றோர்கள் அவற்றை தங்கள் ஏனைய பிள்ளைகளுக்கே பறித்துக் கொடுத்து விடுகின்றார்கள் என்ற ஆதங்கத்தையும் வெளியிட அதிபர் தவறவில்லை. இப் பிள்ளைகட்கு அன்புதான் தேவை என்பதை பெற்றோர் கருத்தில் கொள்வதில்லை.

இன்னொரு விடயமும் இங்கு குறிப்பிடத் தக்கது. அதிபரைத்தவிர ஏனைய அனைவரும் ஆசிரியர்கள்தான். ஆண்கள் எவரும் இல்லை. இங்கு பணிபுரிய வந்தால் பிறக்கும் பிள்ளைகளும் மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளாகப் பிறந்து விடுவார்கள் என்ற தப்பான அதேவேளை பலமான ஐதீகம் தான் அதற்குக் காரணம்.

இப்பாடசாலைக்கான நிதியீட்டம் எவ்வாறு பெறப்படுகின்றது என்று நாம் வினவினோம்.

சமூகசேவை அமைச்சு மூலம் சிறு தொகை பெறப்படுகின்றது. வெட்டுகின்ற 'கார்ட்' மூலம் கடைகளில் பணம் திரட்டப்படுகின்றது. அத்துடன் நோன்புக் காலத்தில் பெறப்படும் வசூல்கள் மூலம் ஓரளவு பணம் திரட்டப்பட்டாலும் அவை போதுமானவையல்ல. இப்பகுதி அரசியல்வாதிகள் கூட இப்பாடசாலையைப் பராமரிப்பதில் பாராமுகம் காட்டுகின்றார்கள்.

பிள்ளைகளின் 'குளப்படியை' தாங்குவதில் ஆசிரியர்கள் சிரமப்பட்டாலும் பொறுமையாகத் தாங்கிக்கொள்வார்கள். அதிபர் சுட்டிக்காட்டிய அழகிய சிறுமியொருத்தி அதிபர் வீடு சென்று மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்தால் மட்டுமே பாடசாலை வருவாளாம்.


இடைவேளையின் போது துள்ளிப்பாய்ந்து, ஊஞ்சலில் விசையாகஆடி, ஏணிக்கூடுகளில் வேகமாக ஏறி படுஉற்சாமாக மகிழ்கின்றார்கள்.

உண்மையில் இவர்கள் 'கடவுளின் குழந்தைகள்' மனச்சுமையுடன் அதிபருக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம்.

○ ஆழியோன்

## செய்திகள்

94 வயதில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்து பட்டம் பெற்ற மூதாட்டியின் பெயர் ஹஸல் சோரேஸ். அமெரிக்கா கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த இவர் ஆறு பிள்ளைகளின் தாய். இவருக்கு 40 பேரப்பிள்ளைகளும் உள்ளனர். வரலாற்றில் சிறப்புப் பட்டம் பெற்ற இவர் தன்னுடைய இளம் வயதின் ஆசையை 94 வது வயதில் நிறைவேற்றியுள்ளார்.



ஜப்பானின் ஹிரோசிமாவிற்குப் போடப்பட்ட அணுகுண்டின் பெயர்– "லிட்டில்போய்" இப் பெயர் அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்ட்டின் செல்லப்பெயராகும். நாகசாகிக்குப் போடப்பட்ட அணுகுண்டின் பெயர் "பற்மேன்" இதைப்போட்டவர் போல்டி பெட்ஸ் என்பவர்.



இராமாயணத்தை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் டபிள்யு. ஏ. சில்வா.

இவர் முறைசார் கல்வியில் ஐந்தாம் வகுப்பைத் தாண்டவில்லையாம்.

ஆனால் சிங்களம் மற்றும் சமஸ்கிருத மொழிகளைப் பண்டிதர் தர்ம ரத்ன, பெலன்னே சிறி வஜிரஞான தேரர் ஆகியோரிடம் கற்றார். 1919 ல்"சிரிசர" சஞ்சிகையை ஆரம்பித்து அவரே பிரதம ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1940ல் "நுவன" என்னும் சஞ்சிகையையும், 1949ல் "திலக்கா" என்னும் சஞ்சிகையையும் வெளியிட்டார். "சிறிய லதா" என்ற நாவலை 1919ல் வெளியிட்டார். அப்போது அவருக்கு வயது 19 ஆகும். இவர் 25 நாவல்களை எழுதியுள்ளார்.

சிறிய லதா, லஷ்மி, ஹிங்கன கொல்லா, பாசல்குருவா ,சுனேத்திரா, ஹந்த பான ஆகியன அவரது நாவல்களில் சில, பல சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

தகவல் : வயலந்

வடக்கிலும், கிழக்கிலும் நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் ஒரு செய்தியை நாட்டிற்கும் சர்வதேசத்துக்கும் உரத்துக் கூறியுள்ளன. அதாவது தமிழர்களுக்கு நியாயம் வேண்டும் என்பதோடு இதுவரை வன்னியில் தமிழர்களுக்கு நடந்த அநியாயங்களுக்காக ஐ.நா. மூலம் சர்வதேசமும் அனுப்பியுள்ள குற்றப் பத்திரிகைகளுக்கு அரசாங்கம் தகுந்த பதிலையும் கூற வேண்டும் என்பதே. இந்தத் தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாய் அமைய வேண்டுமென்பற்காக வடக்கில் அரசாங்கம் கொடுத்த விலை அதிகம். ஜனாதிபதி தமது அமைச்சர்கள், ஆள் அம்பு சேனைகளுடன் அங்குச் சென்று ஒரு போர்க்கால நடவடிக்கைபோல அபிவிருத்தி வேலைகளைக் கவனித்தார். 'அப்பி ஒக்கம எக்காய்' என்று சமத்துவம் பேசினார். மழலைத் தமிழிலும் பேசி மனங்குளிர வைத்தார். இருந்தும் என்ன பயன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றவே அதனைத் தமிழ் மக்கள் வெற்றி பெற வைத்துள்ளதாக ஓர் அமைச்சர் தேர்தல் முடிவுகளையொட்டி விடுத்துள்ள செய்தியை ஒரு நகைச் சுவையாக எடுத்து அனுபவித்துச் சிரிக்கலாம்.

எப்போதும் தேர்தல் முடிவுகள் தமிழர்களைத் தனித் தரப்பாக்கி, கொள்கை ரீதியில் பேரினவாதத்துடன் சமன் செய்து கொள்ள முடியாதவர்களாக்கி, அவலக்குரலன்றி அங்கொன்றுமில்லையென்ற நிலைக்கு உள்ளாக்கி வந்தாலும், தேர்தல் மூலம் அவர்கள் விடுக்கும் செய்தியை எந்த அரசாங்கமும் செவிமடுத்ததாகவோ, நியாயமானதொரு தீர்வுக்கு இறங்கி வந்ததாகவோ சரித்திரமில்லை. அப்படி எந்த அரசாங்கமாவது இணங்கி வருமானால் அது காலத்தை இழுத்தடித்து தமது ஆட்சிக் காலத்தை நீட்டிக்கொள்ளும் ஒரு தந்திரமாகவே இருக்கும். நேற்று வரை அதுதான் நடந்தது, இனிமேலும் அதுதான் நடக்கும்.


சிறுபான்மைச் சமூகங்களுக்கு சமவுரிமை வழங்கக்கூடாது, சமத்துவமாய் நடத்தக்கூடாது என்பது பேரினவாதத்தின் தாரக மந்திரம். அதனைச் சொல்லிச் சொல்லியே அறுதிப்பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தார்கள்; அதனை உறுதிபடுத்துவதால்தான் ஆட்சியில் நீடிக்கிறார்கள்.

ஆகவே இதுவரை சமாதானம் என்ற கானல் நீரை நம்பி, அதற்காகக் காலத்தையும் கைப்பொருளையும் செலவிட்டு ஏமாந்தது போதும். இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ற மண் குதிரையை



# ஐ. நா. போர்க்குற்ற அறிக்கையும்

## இனப்பிரச்சினை தீர்வுக்கான வாய்ப்பும்!



நம்பி நம்மைநாமே ஏமாற்றிக்கொண்டது போல இனியும் ஏமாறிப் போகாமலிருக்க இறைவனாகப் பார்த்து இரக்கப்பட்டுத் தந்தது போன்ற தொரு வாய்ப்பு தமிழர்களுக்கு இப்போது கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பு ஏற்கனவே தமிழர்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது, நினையாப் பிரகாரமானதும் கூட. தமிழர்கள் என்னும்போது தமிழர்களோடு தமிழ் பேசும் ஏனைய சமூகங்களையுந்தான் நானிங்கு குறிப்பிடுகின்றேன். ஏனென்றால் இன ரீதியான ஒடுக்குமுறைக்குள்ளாவோராகவும், எது நடந்தாலும் பாதிக்கப்படுவோராகவும் அவர்கள் தானே இருக்கிறார்கள்! குறிப்பாக - காலாகாலமாக இறப்பு இழப்புகளைத் தோற்றுவித்து வந்த ஒரு முக்கிய பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கின்றது என்னும்போது அதனால் நிம்மதியடைகிறவர்கள் அவர்களுந்தானே!

சரி, இப்போது தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் அந்த அரிய வாய்ப்பு என்ன? இலங்கை அரசின் இறுதிக்கட்டப் போர்க்குற்றங்களை ஆதாரமாகக் கொண்டு அதன் மீது ஓர் அழுத்தத்தை சர்வதேசம் பிரயோகிக்க முனைகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். போர்க்குற்ற அறிக்கையைக் கருவியாக்கி அரசாங்கத்தை ஒரு உடன்பாட்டுக்குக் கொண்டுவர முயற்சிக்கலாம். இதில் ஒரு நிபந்தனையை விதித்து அரசாங்கத்தை அதற்கு இணங்க வைக்கலாம். அல்லது இன்னொரு நிபந்தனை மூலம் சர்வதேச சமூகத்தை இனப் பிரச்சினையின் தீர்வுக்கு உத்தரவாதம் தரச் செய்யலாம். அத்துடன் இத்தனை ஆண்டு கால இவ்வளவு இறப்பு, இழப்பு நெருக்கடிகளுக்கும் இந்த இனப்பிரச்சினையே காரணம் என்ற தெளிவினை அனைவருக்கும் ஏற்படுத்தி, அதன் மூலம் தீர்வுக்கான சாத்தியங்களை உருவாக்கலாம்.

ருவாண்டா நாட்டைப்போல, தென் சூடானைப்போல இலங்கையும் இனப்பிரச்சனை காரணமாக இழந்த இழப்புகள் ஏராளம். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பல்லாயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர், சொத்துகளை இழந்துள்ளனர், அங்கவீனராகி இயல்பு வாழ்க்கையை இழந்திருக்கின்றனர். வன்னி இறுதிப்போரில் மாண்டோர் தொகை நெஞ்சை உலுக்குகிறது. இவையெல்லாம் விரும்பியோ விரும்பாமலோ மக்கள் செய்திருக்கும் தியாகங்கள். இவற்றின் பெறுமதியை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது என்ற உண்மையின் அவசியத்தை உணர்த்த வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினையினால் முழுநாடுமே அழிவுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளாகியிருக்கிறது. இந்நிலை நீடிக்கக் கூடாது என்பதையும் போர்ப் பதற்றத்திலிருந்தோ, அரசாங்கம் அழித்துவிட்டதாகக் கூறும் பயங்கரவாதத்திலிருந்தோ நாடு இன்னும் மீளவில்லை என்பதையும் புலப்படுத்த வேண்டும்.

இலங்கை இன முரண்பாடுகளைப் பயன்படுத்தி ஆசியப் பிராந்திய மற்றும் சர்வதேச ஆதிக்க சக்திகள் தங்கள் நலன்களைப் பேண முற்படுகின்றன. போருக்கு ஆசிவழங்கியவையும் ஆயுதங்கள், தளபாடங்களை அள்ளிக்கொடுத்தவையும் அவை தாம். அவையே இறுதிக்கட்டப் போரில் நடந்த அட்டூழியங்களைப் படம் பிடித்து அதை வைத்து இலங்கை அரசை இன்று மிரட்டி வருகின்றன. ஐ.நா குற்றப் பத்திரிகை அதிலொரு வடிவந்தான். இதிலிருந்து அதன் அந்தரங்கம் என்னவென்று எவருக்கும் விளங்கும். அரசுக்கு எதிராக எது நடந்தாலும் அதன் விளைவுகளுக்கு முழு இலங்கை மக்களுமே முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்பதால் நிச்சயமாக இனமுரண்பாடு தீர்க்கப்பட்டு முழுமையான ஐக்கியம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவேண்டும்.

போர்முடிந்து ஈராண்டுகள் கடந்து விட்டன. போர் ஏற்படுத்திய இழப்புகளுக்குப் பரிகாரமாக இலங்கை அரசு இனப்பிரச்சனைக்கான தீர்வை முன்வைத்து அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நியாயமும் யதார்த்தமும் உணர்ந்த பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட போதும் அரசாங்கம் அதுபற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக, அது பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற பழைய புளித்துப் போன கள்ளை

புதிய மொந்தையிலிட்டுத் தர முயல்கின்றது. இருப்பினும் அரசியல், மற்றும் சமூக ரீதியான இன முரண்பாட்டு நடவடிக்கைகள் கொஞ்சமும் குறைந்த தாகத் தெரியவில்லை.

தற்போது வெளியாகியிருக்கும் இந்த ஐ.நா (குற்ற) அறிக்கை தமிழர்-சிங்களவர்-முஸ்லிம்கள் என அனைவருக்கும் வாய்ப்பானதொன்றாகவே தென்படுகின்றது. சிங்களவர்களைப் பொறுத்தவரை அவர்களில் பெரும்பான்மையானவர் இந்த அறிக்கையை எதிர்க்கின்றார்கள் என்றாலும் இது இலங்கையின் இறைமைக்கு ஆபத்தானது என்பதை விளங்கிக்கொண்டுள்ளனர்.

தமிழர் சமூகம் இந்த அறிக்கையைத் தனக்குச் சாதகமானது; எனவே இதனைப் பயன்படுத்தி அரசாங்கத்தைத் தண்டிக்க வேண்டு மெனவும் விரும்புகிறது. அடி மேல் அடி வாங்கி நொந்த ஒரு நலிந்த சமூகத்தின் பொதுவான விருப்பம் இதுவாகத்தான் இருக்குமென்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும் இந்தக் குற்ற அறிக்கை மூலம் சிலரது கழுத்துக்குக் கயிறு மாட்டப்படுவதை விடவும் புற்றுநோய் போல் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சி னைக்கான ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படுவதே சிறப்பானது என்பதால் நாம் அதைப்பற்றியே சிந்திக்க வேண்டும். கடந்து போனதை நினைத்துக் கதறி அழுவதை விடவும் இருப்பதைக் காப்பாற்றிக் கொள்ள இதுவே சிறந்தது என்றெண்ணிச் செயற்பட வேண்டும்.

● புளியந்தீவான்

## தமிழ்க் கதைஞர் வட்டம் [தகவம்]

## 2010ஆம் ஆண்டுக்கான சிறுகதை மதிப்பீட்டு முடிவுகள்

### 1ம் காலாண்டு

**1ம் இடம்** - கெகிறாவை ஸஹானா - **அங்கும் இங்கும்** (சிறுகதை) - **மல்லிகை** (சஞ்சிகை)
**2ம் இடம்** - வழங்கப்படவில்லை
**3ம் இடம்** - சந்திரகாந்தா முருகானந்தன் - **வாழ்கையின் ரணங்கள்** (சிறுகதை) - **மல்லிகை** (சஞ்சிகை)
**சிறப்புப் பாராட்டு** - கே. ஆர். டேவிட் - **பாண்போறணை** (சிறுகதை) - **ஜீவநதி** (சஞ்சிகை)

### 2ம் காலாண்டு

**1ம் இடம்** – மருதம் கேதீஸ் – **ஔவைதரு முகிலி** (சிறுகதை) – **கலைமுகம்** (சஞ்சிகை)
**2ம் இடம்** – தீ. மயூரன் – **வாசமில்லா மலர்கள்** (சிறுகதை) – **சுடர் ஒளி** (பத்திரிகை)
**3ம் இடம்** – வழங்கப்படவில்லை
**சிறப்புப் பாராட்டு** – க. சட்டநாதன் – **சடங்கு** (சிறுகதை) – **கலைமுகம்** (சஞ்சிகை)
**சிறப்புப் பாராட்டு** – பவானி சிவகுமரன் – **நிழல் கொஞ்சம் தா** (சிறுகதை) – **ஜீவநதி** (சஞ்சிகை)

### 3ம் காலாண்டு

**1ம் இடம்** – சந்திரகாந்தா முருகானந்தன் – **உண்மை வலி** (சிறுகதை) – **மல்லிகை** (சஞ்சிகை)
**2ம் இடம்** – களுவாஞ்சிக்குடி யோகன் – **பயணம் எங்கே** (சிறுகதை) – **வீரகேசரி** (பத்திரிகை)
**3ம் இடம்** – கிறிஸ்டி முருகுப்பிள்ளை – **உண்மையின் ஒளி** (சிறுகதை)– **தொண்டன்** (சஞ்சிகை)
**சிறப்பு பாராட்டு** – பவானி சிவக்குமார் – **மீண்டும் புதிதாய்ப்பிறப்போம்** (சிறுகதை)– **வீரகேசரி** (பத்திரிகை)

### 4ம் காலாண்டு

**1ம் இடம்** – வழங்கப்படவில்லை
**2ம் இடம்** – எம்.எஸ். அமானுல்லா – **தாய்மை** (சிறுகதை) – **ஜீவநதி** (சஞ்சிகை)
**3ம் இடம்** – ராணி சீதரன் – **இன்று மட்டும்** (சிறுகதை)– **மல்லிகை** (சஞ்சிகை)

# கடுகுக் கதை 34 புரிந்துணர்வு



அன்ரனின் பள்ளித்தோழன் ரசாக், தன் மகன் இஸ்மாயிலுடன் அன்ரனின் வீட்டுக்கு வந்திருந்தார். அன்ரனும்,ரசாக்கும் ஒன்றாக 'சென்றர் கொலிஜில' படித்தவர்கள். இஸ்மாயில் தன் ஊரிலுள்ள முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் வகுப்பு படிக்கின்றான்.

'அன்ரன்! பெரிய வியாழன் தொடக்கம் உயிர்த்த ஞாயிறு வரை எண்ட மகன் இஸ்மாயில் உங்கட வீட்ட நிக்கட்டும். நீங்க சேச்சுக்கு போகக்குள்ள அவனையும் கூட்டிக் கொண்டு போய் எல்லா வழிபாடுகளையும் காட்டி விளங்கப் படுத்துங்க' என்றார் ரசாக்.

'ஏன் ரசாக்....என்ன விசயம்.....?' என்றார் அன்ரன்.

'நாம படிக்கக்குள்ள எவரும் எந்தப் பள்ளிகூடத்திலையும் படிக்கலாம்... பாகுபாடு இல்ல. ஒரே பள்ளியில அன்ரனும் ரசாக்கும் கந்தசாமியும் சில்வாவும் படிச்சதால ஒருவரையொருவர் இன ரீதியாகவும் சமய ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் புரிஞ்சி கொண்டனாங்க.... இப்ப அப்படியில்ல. தமிழ் பள்ளிக்கூடம் சிங்கள பள்ளிக்கூடம் முஸ்லிம் பள்ளிக்கூடம் எண்டு பிரிச்சதால நம்மட பிள்ளைகளுக்கு மற்ற இனங்களப் பற்றியும் கலாசாரம் பற்றியும் சமயங்களப்பற்றியும் ஒண்டும் விளப்பமில்ல. நம்மட அரசியல் தலவருங்க நல்லது எண்டு நினைச்சு செய்யிற சில விசயங்கள் ஏற்படுத்துகிற தீமையான விளைவுகளைப்பற்றியும் யோசிக்கிறதில்ல....


ரசாக் சொல்வது சரிதான் என்று அன்ரனுக்கும் புரிந்தது.

'முந்தி சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள், பிறகு 'போயா 'பிரிபோயா' விடுமுறை நாட்கள், திரும்பவும் இப்போ சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள், என்றாலும் 'போயா' வில கைவைக்க இயலவில்ல. லீவு நாட்கள்ர எண்ணிக்கை கூடிய நாடு இலங்கை என்று அன்ரன் மனதுக்குள்ளே நினைத்துக்கொண்டான்.

'சித்திர வருஷத்துக்கு கந்தசாமி வீட்டில யும் தீபாவளிக்கு ஹட்டன் இராமையா வீட்டிலையும் வெசாக்குக்கு அனுராதபுரம் சில்வா வீட்டிலயும் இஸ்மாயில கூட்டிப்போகப்போறன்' என்றார் ரசாக்.

● பற்றி

## இரத்த தானம் புரிவோரை இளைஞர்கள் பின்பற்றட்டும்



துன்பத்திலிருக்கும் சகோதரனுக்கு அமைதியான வழியில் உதவும் பொருட்டு, "இரத்ததானம்" செய்வோரை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறார் திருத்தந்தை. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி, ஒவ்வோர் ஆண்டும் 9.20 கோடி மக்கள் இரத்ததானம் செய்கின்றனர்.



## குறும்(புப்)பா - 66

மர்மங்கள் சூளும்நம் நாடு
மனிதர்கள் மாளுஞ்சுடு காடு
தர்மங்கள் தலைவீழ்ந்து கிடப்பதனால் இதுவிதியோ
கர்மங்கள் தொலையட்டும் ஓடு

~ மலர் ~


# ஆளுமையின் அவசியம்

*"ஆறடி வளர்ந்தென்ன*
*ஆளுமாய்இருந்தென்ன*
*ஆளுமை இல்லையேல்*
*அவனும் பொம்மையும் ஒன்று"*

**வா**ழ்க்கையில் அனைவரும் அறிந்திருக்க வேண்டியதும் விருத்தி செய்து சமூக ஈடேற்றத் துக்குப் பயன்படுத்த வேண்டியதுமான ஒன்று ஆளுமையாகும். எனவே ஒவ்வொருவரும் ஆளுமை என்றால் என்ன, ஆளுமை எவ்வாறு வளர்கின்றது, ஆளுமை வளர்ச்சியின் இயல்புகள் யாது, ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்கு பெறும் காரணிகள் எவை போன்ற அம்சங்களை அறிந்திருப்பது அவசியம்.

முதலில் ஆளுமை என்னவென்று நோக்குவோம். உளவியலாளர்களின் கருத்துப்படி ஆளுமை என்பது எல்லோருக்கும் உள்ள ஆனால் தனியாளில் இருந்து வேறாக்கிப் பார்க்க முடியாத உறுதியான நடத்தை முறைகளின் தொகுப் பாகும்.

ஒருவரது திறமைகள், ஆற்றல்கள், சிந்தனை முறைகள், அனுபவங்கள், கல்வித் தகைமைகள், நுண்ணறிவு விருத்தி தொடர்புசாதனப் பயன்பாடு, போசாக்கான உணவு என்பவற்றால் விருத்தியடையும் ஒன்றே ஆளுமையாகும். ஒவ்வொருவரது ஆளுமையும் வீட்டிலே ஆரம்பமாகின்றது. ஆளுமை என்பது வளர்ச்சிபெறும் ஒன்றாகும். அனுபவங்கள் அதிகரிக்க, திறன்கள் விருத்தியடைய ஆளுமையும் வளர்ந்து செல்கின்றது. கல்வியின் நோக்கங்களில் ஒன்று ஆளுமையை விருத்தி செய்வதாகும். அடுத்து ஆளுமை எவ்வாறு வளர்கிறது என்று நோக்குவோம். ஒன்று பரம்பரையினால் கிடைத்த உயிரியல் அடிப்படையிலான இயல்புகள் படிப்படியாக வளர்ச்சி அடைவதால் ஆளுமை வளர்கின்றது. அடுத்து, சூழல் காரணிகளினால் ஆளுமை வளர்ச்சி அடைவதுமுண்டு, வளர்ச்சி குன்றுவதுமுண்டு. அனுபவங்களால் ஆளுமை வளர்ச்சி அடைகின்றது. திறன்களை விருத்தி செய்வதால் ஆளுமை வளர்கின்றது. பேச்சுத்திறன், எழுத்துத்திறன், விளையாட்டுத்திறன், பாடுந்திறன், ஆடுந்திறன், கருத்து வெளியிடுந்திறன், பிரச்சினை தீர்க்குந்திறன், நடிப்புத்திறன், வாதிடுந்திறன், சிந்தனைத்திறன் என்பன வளர்ச்சி அடைய அடைய ஆளுமையும் வளர்ச்சியடைகின்றது. அடுத்து உடல் ஆரோக்கியமும் ஆளுமை வளர்ச்சிக்கு உறு துணையாகின்றது.



கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், நம்பிக் கைகள், கலைகள், ஒழுக்க நெறிகள், சட்ட திட்டங் கள், சம்பிரதாயம் என்பன ஆளுமையைக் கட்டி எழுப்பும் காரணிகளாகும். உளவியலாளர்களின் கருத்துப்படி ஆளுமையானது படிப்படியாக வளரக் கூடிய ஒன்றாகும். அத்தோடு ஆளுமை வளர்ச்சி யானது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து இடம்பெறும் ஒன்றாகும்.

மேலும், சூழல் காரணிகள் ஆளுமையில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றன. குடும்பச்சூழல், கல்விச் சூழல், சமயச்சூழல், சாதிச்சூழல், குடியிருக்குஞ் சூழல். உ+ம் கற்றறிந்தோர் வாழும் சூழலில் உள்ள பிள்ளையின் ஆளுமைக் கும் சேரிப்புறச் சூழலில் வாழும் பிள்ளையின் ஆளுமைக்கும் இடையே பாரிய வேறுபாட்டைக் காண லாம். சேரிப்புறங்களில் கல்வி அறிவின்மை, சன நெருக்கடி, சுகாதாரமின்மை, வறுமை, போதைவஸ்துப் பிரயோகம், பாலியற் பிறழ்வுகள், ஒழுக்க நெறிப்பிறழ்வுகள் இவற்றால் ஆளுமை சீர்கெடுகின்றது.

அடுத்து, பெற்றோரைப் பிரிந்து வாழும் பிள்ளைகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், அதிகக் கட்டுப்பாட்டின் கீழ்

தவறான வழிநடத்தல், கட்டுப்பாடற்ற போக்கு உ+ம் வீட்டுத் தலைவி பொறுப்புகளின்றிச் சதா தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன் இரசனையில் ஈடுபட்டிருக்கும்போது பிள்ளைகளும் அதனையே பின்பற்றுகிறார்கள். சும்மா படி படி என்று கத்துவதால் ஒன்றும் கைகூடாது பெரியோர் செய்வதையே சிறியோரும் பின்பற்றுவர். இன்றைய சினிமா நாடகங்கள், சின்னத் திரையில் ஆபாசங்களையும் பழிவாங்கல்களையும் கொலை, கொள்ளைகளையும் சித்தரிப்பதாகவே பெரும்பாலும் அமைகின்றன. இவற்றைக் காணும் பிள்ளைகள் தாமும் அவற்றைப் பின்பற்றவே விளைவார்களேயல்லாது, கல்விக்கோ ஒழுக்க விழுமியங்களுக்கோ முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள்.

அடுத்து செல்லிடத் தொலைபேசியால் தமது பாலியல் வெளிப்பாடுகளைக் கட்டுப்பாடின்றி எதிர்ப்பாலாரிடம் பேசி மகிழ்கின்றார்கள். இது கூட கல்விச் செயற்பாட்டுக்குத் தடையாக அமையலாம். TVS ஊர்தியைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்க அவர்கள் அதைப் பயன்படுத்தி காதலர்களைத் தரிசிக்கச் செல்கிறார்கள். இன்ரநெற் இணைப்பை ஏற்படுத்தி, பிள்ளைகளின் இஷ்டம் போலக் கட்டுபாடின்றி பெற்றோர்கள் விடுவதால் அவர்கள் ஆபாசப்படங்களை அதன்மூலம் பார்த்துச் சீரழிகின்றார்கள். பிறழ்வு நடத்தையுள்ள நண்பர்களுடன் பழக அனுமதித்தல். இவற்றால் தெரிந்தோ, தெரியாமலோ தமது பிள்ளைகளின் ஆளுமை சீர்கேடடையக் காரணமாகின்றார்கள்.

மேலும் ஆளுமையை வளர்ப்பதற்குத் திறன்களை மட்டும் வளர்த்தால் போதாது; நுண்ணறிவையும் வளர்க்க வேண்டும். வாசிப்புத் திறனை முக்கியமாய் ஊக்குவிக்க வேண்டும்.

'வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்' நுண்ணறிவை வளர்ப்பதுடன் பொது அறிவையும் விருத்தி செய்தல், ஒழுக்க விழுமியங்களை நெறிப்படுத்தல், ஓய்வு நேரத்தைப் பயனுடையதாக்குதல், தொடர்பு சாதனங்களைச் சீரான முறையிலும் பயனளிக்கும் வகையிலும் பயன்படுத்துதல், அதிக அடக்குமுறைக்கு இடங்கொடுக்காதிருத்தல், பிள்ளையின் உடல் உள ஆரோக்கியத்தைப் பேணல், பிள்ளைகளுக்கு அவ்வப்போது பாராட்டுகளை வழங்கி, கணிப்பீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல், குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலை உருவாக்கிப் பிள்ளைகளுடன் ஆரோக்கியமான முறையில் உரையாடிச் சீரான உறவுமுறைகளைப் பேண வேண்டும். ஓய்வு நேரங்களில் செஸ், கரம், டாம் போன்ற விளையாட்டுகளை விளையாடலாம். பிள்ளைகளுக்கு அன்பு காட்டல், ஆலோசனை வழங்கல், வழிகாட்டல், சுய சிந்தனைக்குத் தூண்டல், பாலியல் கல்வியைப் பாடசாலை மட்டத்தில் கற்பித்தல், இவை அனைத்தும் ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும்.

ஆளுமை வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சம் 'நான்' என்ற எண்ணக்கரு. நான் யார், எனது பலம் யாது, பலவீனம் யாது என இனங்காண வேண்டும். தன்னுள் புதைந்து கிடக்கும் அபூர்வ சக்தியை வெளியே கொண்டு வரவேண்டும். அப்போதுதான் ஒருவரது ஆளுமை வலுப்பெறுகின்றது. ஒரு பிள்ளையின் திறமையை வெளிக்கொண்டு வர பெற்றோரும், ஆசிரியரும் உதவி செய்ய வேண்டும். ஒரு மனிதன் அறியாமை காரணமாக தன் ஆற்றலில் பத்து வீதத்தையே பயன்படுத்துவதாக உளவியல் மேதைகள் கண்டறிந்துள்ளார்கள். பயம் கூச்ச உணர்வு, பிறருடன் தன்னை ஒப்பிட்டு தாழ்வு மனப்பான்மை அடைதல் போன்றவற்றால் ஆளுமை வளர்ச்சி குன்றுகின்றது. அன்று ஆசிரியர்களால் 'மக்கன்' என்று பெயர் சூட்டப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டவர்தான் தொமஸ் அல்வா எடிசன். அவர் தானே ஆராய்ச்சியில் மூழ்கி மின்குமிழைக் கண்டுபிடித்ததோடு 168 ஆக்கங்களையும் ஆராய்ந்து கண்டுபிடித்துச் சாதனை படைத்தார். அதேபோன்று, சாதாரண சைக்கிள் திருத்தும் கடைக்காரனின் பிள்ளைகள்தான் ரைட் சகோதரர்கள். அவர்களது விடா முயற்சிதான் ஆகாய விமானக் கண்டு பிடிப்பு. எனவே ஆளுமை வளர்ச்சியானது தன்னுள் மறைந்திருக்கும் அபார சக்தியை இனங்கண்டு சாதனை படைக்கிறது எனலாம்.

கட்டிளமைப் பருவத்தில் பாலியல் உணர்வு இயல்பானதே, எனவே இப்பருவத்தில்

தவறான தேடல்களால் பாலியல் அறிவை தவறான கோணத்தில் பெற முயல்கின்றனர். இதனால் குழப்பங்களுக்கு ஆளாகி மெய்ப்பாட்டு முறைப் பாடுகளை உணர்வு பூர்வமாக வெளியிடுவார்கள். 'என்னால் படிக்கமுடியாது, ஒரே குழப்பமாகவுள்ளது' இதன் பின்னணியில் மனச் சோர்வு, தயக்கம், பசி இன்மை, குற்றஉணர்வு, கோபம், நம்பிக்கை அற்ற நிலை, பயம் போன்ற நெருக்க உணர்வுகளால் சோர்வடைவார்கள். இவற்றின் பின்னணிதான் குடும்பத்தில் பாலியல் ரீதியான பிரச்சினைகள், வாழ்க்கை உடைவுகள், முறிவுகள், பிள்ளைகள் பெற்றோரை மதிக்காமை, கோபமேற்பட்டுப் பொருட்களை தூக்கி எறிதல், உடைத்தல், உறவு நிலைகளில் திருப்தி இன்மை, முறுகல் நிலை, போன்ற பிறழ்வுபட்ட நிலைகள் தலை தூக்குகின்றன. இவ்வாறான சூழல்கள் ஆளுமை யைச் சிதைத்துவிடுகின்றன. எனவே பாலியல் கல்வியை ஆரோக்கியமான முறையில் புகட்டுவதால். கட்டிளமைப் பருவத்தில் சுயகட்டுப்பாட்டுடன் நடந்து தன்னையும் மற்றவர்களையும் வென்று விட வழி பிறக்கும்.

சிறந்த ஆளுமை உள்ள மாணவர்களது பண்புகள் :

- சிறந்த உடல் உள ஆரோக்கியமுள்ளவர்கள்.
- ஒழுக்க சீலராகத் திகழ்வார்கள்.
- முன் வந்து செயல் ஆற்றும் திறன் காணப்படும்.
- தலைமைத்துவப் பண்புகள் காணப்படும்.
- ஆக்கத்திறன் அதிகமாகக் காணப்படும்.
- நுண்ணறிவு அதிகமாகக் காணப்படும்.
- சிறந்த தீர்மானங்களைச் சிறப்பாக எடுப்பார்கள்.
- பேச்சு, எழுத்து, வாசிப்பு என்பவற்றில் திறமைசாலி.
- சம நிலையான மனவெழுச்சி காணப்படும். கற்பதில் ஆர்வம் காட்டுவார்.
- பிரச்சினைகளை எளிதில் விளங்கித் தீர்த்து விடுவார்கள்.
- கிரகித்தல், அவதானம், ஞாபக சக்தி என்பன காணப்படும்.
- அனைவரையும் கனம் பண்ணி அடக்கமாக நடப்பார்.
- பிறருக்கு முன் வந்து உதவி செய்வார்கள்.
- சிறப்புத் திறன்கள் காணப்படும்.

**வயலற்சரோஜா சந்திரசேகரம்**
**B.Com-Dip.in.Ed-M.Com.(Hons)**

# க வி தை



எத்தனை தடவை
ஏறி மிதித்தாலும்
இத்தனை பொறுமை
இதற்கு உண்டு
"புல்"

பாடுபட்டு யாரோ
கட்டிய வீட்டுக்குள்
மாற்றானின் அரசாட்சி
"புற்றுக்குள் பாம்பு"



இரு பைகளில்
அதன் இருப்பு
"மூச்சு"



உனது சுமத்தலுக்கான
எனது நன்றிக்கடன்
"தாய்க்கொரு தாலாட்டு"

வான மகளின் வீட்டு முற்றத்திலே
சூரிய தேவனும்
மழைத் தேவதையும்
சேர்ந்து போடும் அழகிய கோலம் ....
"வானவில்"



● கன்னிமுத்து வெல்லபதியான்



உலக அமைதி தினம் ஆகஸ்ட் 6,

# அமைதிப் பயணம்

உலக அமைதி தினம் அனைத்துலக ரீதியில் கொண்டாடப்பட்டது.

இன்று அமைதி பற்றி உலகம் முழுவதும் பேசப்படுன்றது, கொண்டாடப்படுகின்றது, தேடப்படுகின்றது.

இந்தத் தேடல் உயிரினங்கள் தோற்றம் பெற்றது முதல் நடைபெறுகின்றது.

பொதுவாக, உயிர்க் கொலைகள் நடைபெறாத, பாதுகாப்பான ஒரு சூழல் தான் அமைதிக்குத் தேவை என்னும் கருத்துப் பலரிடம் உண்டு.

இக்கருத்து முழுமையானதல்ல என்பதே உண்மை. அமைதியின் பரிமாணம் பெரிது, அதை அளவிட முயலுகின்ற மனித அறிவு சிறிது.

மகிழ்ச்சியான வாழ்வே மானிடத்தின் குறிக்கோள். அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க அமைதி அடிப்படையல்லவா?

மகிழ்ச்சி என்பது மனது அனுபவிக்கும் ஓர் உணர்வு. அதன் அடிப்படை அமைதி என்றால் அமைதியும், மனம் சம்மந்தப்பட்டது தானே. மனதின் அமைதியைக் குலைக்கின்ற காரணிகள் உள்ளேயும் உண்டு, வெளியேயும் உண்டு. அகத்திலுமுண்டு, புறத்திலுமுண்டு, மனிதனிடம் இயல்பாகவுள்ள இயலாமை, அறியாமை, சுயநலம் போன்றவையே அகத்தேயும், புறத்தேயும் உள்ள அமைதியைக் குலைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

மனிதன் தன்னிடத்தேயுள்ள இயலாமையை, அறியாமையை, சுயநலனை. முழுமையாக வென்றுவிடுதல் என்பது என்றுமே சாத்தியமானதொன்றல்ல. அதேவேளை அரசியல் விடுதலையோ, ஆயுதங்களின் உறக்கமோ, பொருளாதார அபிவிருத்திகளோ அமைதியைக் கொண்டு வந்துவிடாது. அமைதியைத் தேடும் மக்கள் வளர்ந்த முதலாம் உலக நாடுகளிலும் உண்டு, வளரத்துடிக்கும் மூன்றாம் மண்டல நாடுகளிலும் உண்டு.

நமக்குள் உறங்கிக் கிடக்கும் அமைதியை நாம் மலரச்செய்ய வேண்டுமென்றால், நம்மை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது எல்லைகளை, நமது இயலாமைகளை, நமது இலக்குகளை நாம் அறிந்து புரிந்து ஏற்றுக்கொண்டு வாழ முயலும் போதுதான் அமைதியின் பாதையில் நாம் நடக்கத் தொடங்கலாம்.


நமக்குள் நம்மை தேடுவது ஓர் ஆன்மீகம். கடவுள் என்று சொல்லப்படும் அந்த மகாசக்தியை நோக்கிய ஓர் பயணம். உலக அமைதி தினம் புறத்தே ஆயிரம் சடங்குகளைக் கொண்டிருந்தாலும் அது நமக்குள் நம்மைத் தேட, நம்மை புரிந்து கொள்ளத் தூண்டுகிறது.



○ மலர்

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
**30- 09 - 2011**




# விவிலியம் கற்போம் - 100

**(இணைச்சட்டம் 1:13–18)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

உங்கள் ஒவ்வொரு குலத்திலும் ஞானமும் ............................................................. நற்பெயரும் கொண்டவர்களைத் தேர்வு செய்யுங்கள். நான் அவர்களை உங்களுக்குத் ........................................ ஏற்படுத்துவேன். நீங்களும் எனக்கு மறுமொழியாக, 'செய்யவேண்டியது குறித்து நீர் சொன்னது நன்று' என்றீர்கள், எனவே ஞானமும்............................................ கொண்ட உங்கள் குலத் தலைவர்களை நான் தேர்ந்தெடுத்தேன், அவர்களை ஆயிரவர் தலைவராக, ஐம்பதின்மர் தலைவராக, பதின்மர் தலைவராக, மற்றும் ............................................ குலத்தின் அலுவலர்களாக ஏற்படுத்தினேன். மேலும் உங்கள் நீதித்தலைவர்களுக்கு நான் கட்டளையிட்டு, 'உங்கள் சகோதரர்களின் வழக்குகளைக் கேளுங்கள்' ஒருவனுக்கும் அவன் ............................................ அல்லது அவனோடு தங்கும் அந்நியனுக்குமிடையே நீதியின்படி........................................... விருப்பு வெறுப்பின்றி தீர்ப்பிடுங்கள். உயர்ந்தோனுக்கும், தாழ்ந்தோனுக்கும் ............................................ செவிகொடுங்கள். எந்த மனிதனுக்கும் அஞ்சவேண்டாம். ஏனெனில் ............................................ கடவுளுக்கே உரியது, உங்களால் தீர்க்க இயலாததை என்னிடம் கொண்டு வாருங்கள். 'நான் ............................................ கேட்பேன்' என்றேன். இவ்வாறு, நீங்கள் செய்ய வேண்டிய ............................................ அந்நேரத்தில் கட்டளையாகக் கூறினேன்.

**விடைகள்:** **உங்கள் ஒவ்வொரு, தலைவர்களாக, அறிவாற்றலும், சகோதரனுக்குமிடையே, வழக்கை, ஒன்றுபோல், அனைத்தையும், நற்பெயரும், தீர்ப்பிடுங்கள், நீதித்தீர்ப்பு.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 100

**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. Sony என்ற உலகப் புகழ் பெற்ற நிறுவனத்தை உருவாக்கியவர்
(அக்கியோமொறிட்டா, நோறியே ஒகா, ஹென்றி போட்)

2. தமிழ் மொழியில் உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
(226, 216, 236)

3. "காற்று வெளியிடைக் கண்ணம்மா" என்ற பாடலைப் பாடியவர்
(கண்ணதாசன், மருதகாசி, சுப்பிரமணிய பாரதியார்)

4. அண்மையில் வெளிவந்த இந்தியத் தமிழ்த் திரைப்படம் ஒன்றில் நடித்துப் புகழ் பெற்ற இலங்கைக் கவிஞர்
(ஜெயபாலன், காசி ஆனந்தன், நிலாபாலன்)

5. துட்டரைக் கண்டால்?
(கட்டி அடி, எட்டிப்பிடி, தூர விலகு)

6. கண்டனன் வணங்கினான்.
(வினையெச்சம், பெயரெச்சம், முற்றெச்சம்)

பெயர் : ..............................................................................


முகவரி : ..............................................................................

..............................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 100**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................



# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் - 98 விடைகள்

யோர்தானை, ஆண்டவருக்கு, தலைவா, மோசே, கடந்து காத்து, மோசே, தீபோ, மனாசே, அவ்வோத்து

## அறிவை வளர்ப்போம் - 98 விடைகள்

1) 206
2) வேகமாகப் பரவும்
3) கணிதம்
4) ஜெயங்கொண்டார்
5) சிறக்கப்போ
6) படர்க்கை வினைமுற்று

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**இருபிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறுவோர் இம்முறை எவரும் இல்லை. ஒரு பிரிவுக்கு மடடும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- யே. அனா ஜெருவினா
  இல.12, 3ம் குறுக்கு
  திருச்செந்தூர் வீதி
  கல்லடி- மட்டக்களப்பு.
- செல்வன் சு.விக்டர்
  மே/பா, திருமதி சு. மைக்கல்
  1176, பாலையூற்று
  திருகோணமலை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 50 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  செல்வி எஸ். விஷ்மிதா
  மே/பா, திருமதி S.N.தெய்வேந்திரன்
  1024, பாலையூற்று
  திருகோணமலை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  K. ஷெரீன்
  93 /2, 9ம் ஒழுங்கை
  நீதிமன்ற வீதி
  திருகோணமலை.
- **3ம் பரிசு - 200/=**
  ஜோ.ஜெயசீலி
  சிறுவர் இல்லம்
  நல்லாயன் கன்னியர்
  மடம், வாழைச்சேனை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

# காற்றில் கலந்துவரும்.....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

## செப்டெம்பர் - 2011

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.55 மணி**

நாள்: *10, 11, 12, 13, 14, 15, 16*
*24, 25, 26, 27, 28, 29, 30*

**சிறுவர் உலகம் - மாலை 7.00 மணி**

நாள்:- 06, 20

கதை, செபம், பாடல்கள் இன்னும்.........

**புதிய உலகம் - மாலை 7.00 மணி**

நாள்:- 04, 18

இறைவார்த்தை வழிபாடு, வேரைத்தேடி, ஈழத்தை அளந்த புனிதன், சிந்தனை உரை, குறுநாடகம், உலகத் திருச்சபைச் செய்திகள், பாடல்கள் இன்னும் .......

---

நிகழ்ச்சித் தொகுப்பு :
மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.